7

ஜகன்மோகினி

8 APR 1944
MADRAS

தமிழுலகுக்கோர் புதுமை

'ஒப்பிலாத ஸமுதாயம், உலகத்துக்கொரு புதுமை' என்று நம் ஸமுதாயத்தைப்பற்றி பாரதியார் பாடினார். அதேபோல நாளது 1-1-44 வெளியாகும் மோகினி ஆண்டுமலரைப்பற்றி மோகினிப் பிரியர்கள் இப்போதே 'ஒப்பிலாத வெளியீடு, தமிழுலகுக்கோர் புதுமை' என்று பாட ஆரம்பித்துவிட்டார்கள். ஏன்? விவரங்கள் உள்ளே பார்க்கவும்.

மலரின் விலை ரூபாய் மூன்று

இம்மாதத்தில் மாத்திரம் குறைந்த விலை ரூ. 2-8. உடனே முந்துங்கள்.

JL
N211, N223m
N43.20.11
183085

Vol. 20. No. 11. சுபானு
NOV. 1943. ஐப்பசி
20 CENTS

ஆசிரியை- வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஸ்ரீ



அன்புடையீர்!

மங்களகரமான தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடி களிப்புற்றிருக்கும் உங்களுக்கு "மோகினி" மேலும் மகிழ்ச்சியளிக்கும் செய்தியைக் கொண்டுவந்திருக்கிறாள். அறிஞர்களின் ஆதரவு தினேதினே அதிகரித்து வருவதால் மோகினி மலர் அதி விசேஷமுறையில் தயாராகிவருகிறது.

தமிழுலகுக்கோர் புதுமை.

தமிழுலகில் இதுவரை கண்டிராத அரிய காரியத்தை நமது மோகினிதான் சாதிக்கவேண்டுமென்று ஜகன்மோகனன் ஆசிர்வதித்துள்ளார். ஒரே மலரில் 37 ஸ்த்ரீரத்தினங்களின் திறமையை வெளியிட முன்வந்த பெருமை மோகினியைச் சேர்ந்துவிட்டது. தவிர, ஒரே மலரில் ஒரு தனி நவீனமும், சுமார் 70 அரிய விஷய தானங்களும் வாசகர்கள் கண்டு களிக்கப்போவது தமிழ் பத்திரிகை உலகில் இதுவே முதல்தரம். புதுமையுடன் மணங்கமழ வரும் நமது மலருக்கு வேறு எந்த மலருக்கும் எழுதாத சில பிரபலஸ்தர்கள் விசேஷ கட்டுரைகள் அளித்திருக்கிறார்கள்.

நமது ஸ்ரீவைஷ்ணவ அன்பர்களுக்கு!

நமது ஸ்ரீவைஷ்ணவ அன்பர்களுக்கு இணையிலா மகிழ்ச்சி யளிக்கும் இரண்டு அரிய வியாசங்கள் பிரஸித்திபெற்ற இரண்டு ஸ்வாமிகளால் ஆசீர்வாதத்துடன் க்ருபை செய்தருளப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ உ. வே. முதலியாண்டான்ஸ்வாமி குமாரர் ஸ்ரீ. உ. வே. கோயில் கந்தாடை வாதூல அண்ணாவிலப்பன் குமார ஸ்ரீசைலாசாரியார் ஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமியும் மோகினி அன்பர்களுக்கு அரிய பொக்கிஷங்களை அளித்திருக்கிறார்கள்.

சுமார் 100 படங்கள்

செப்டம்பர் இதழில், மலரில் சுமார் 50 படங்கள் வெளிவருமென்று அறிவித்திருந்தோம். அக்டோபர் இதழில் "எல்லாம் 62" என்று அறிவித்திருந்தோம். ஆனால் இப்போது, உங்களைப் பரவசமூட்ட சுமார் 100 படங்கள் வெளியாகுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மலரின் விலை ரூ. மூன்று

முதல்முதலில் எதிர்பார்த்ததைவிட மலரின் அளவும், அழகும் மிகவும் அதிகமாக வளர்ந்து சிறப்பாக வெளிவரப் போவதால், அதிகரித்த செலவை உத்தேசித்து மலரின் விலையை ரூ. 3/- ஆக உயர்த்தவேண்டிய அவசியமேற்பட்டுள்ளது.

குறைந்த விலை

மலரின் விலை ரூ. 3/- ஆக உயர்த்தியிருப்பினும், இம்மாதம் குறைந்த விலையில் பதிவு செய்கிறோம். உடனே முந்துங்கள்.

மலரும், சந்தாவும். ரூ. 4-12-0
மலர் மட்டும் ,, 2-10-0

ஸ்ரீரா[illegible]

சுபானு ஞூ ஐப்பசி மீ
நவம்பர் 1943

மலர் 20 இதழ் 11

8 APR 1944
MADRAS

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீராகவ கவி

Vol. 20. No. 11 Nov. 1943.

கலைகளில் கடவுள்

பி. ஸ்ரீ

"பக்தன் எப்படியிருப்பான்?" என்ற கேள்வியை ஒரு சமயம் ஸ்ரீரங்கத்திலிருந்து வந்த வைஷ்ணவர் ஒருவர், திருப்பதியென்று பிரசித்தமாயிருக்கும் வேங்கடமலையில் கைங்கரியம் செய்துகொண்டிருந்த பெரியாரான அனந்தாழ்வானை நோக்கிக் கேட்டார். கேட்டவர் தமிழ்நாடெங்கும் பிரசித்தராயிருந்த **'பட்டர்'** என்ற ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யருடைய உத்தம சிஷ்யர்களில் ஒருவரென்பது அனந்தாழ்வானுக்குத் தெரியும்.

பொழுது விடிந்த சமயம் கோழி கூவிக்கொண்டிருந்தது; மாளிகைக்கு எதிரேயுள்ள தடாகத்தில் கொக்கு மீனைத் தேடித்திரிந்தது. அங்கே அடியார்களுக்காக நடைபெறும் விருந்துகளுக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு பிரபு அனுப்பிய உப்பு மூட்டை ஒன்றை வேலைக்காரர்கள் அப்போதுதான் கொண்டு சேர்த்தார்கள். கேள்வி கேட்டவருக்கு அந்தக் காட்சியை அனந்தாழ்வான் சுட்டிக் காட்டி,

கொக்கைப்போல் இருப்பான்; கோழிபோல் இருப்பான்;
உப்பைப்போல் இருப்பான்; உம்மைப்போல் இருப்பான்

என்று பதில் சொன்னாராம்.

183085

எவ்வளவு பெரிய விஷயம், எவ்வளவு சுருக்கமாய்ப் பண்டித பாமர ரஞ்சகமான வெள்ளைச் சொற்களால் விளையாட்டாகச் சொல்லப்பட்டது! இந்த விநோதமான சூத்திரங்களை எவ்வளவு லகுவாக, எவ்வளவு வேடிக்கையாக ஞாபகப்படுத்திக்கொள்ளலாம்!

கொக்கைப்போலிருப்பான்

கொக்கு எங்கே யிருக்கிறது? எப்படி இருக்கிறது! என்ன செய்கிறது? நீர்வளமுள்ள இடத்தில் காணப்படுகிறதல்லவா? பக்தனும் ஸத் ஸங்கத்திலே பழகி, ஸதாசாரத்தோடு வாழ்க்கை நடத்துவதற்குரிய இடங்களிலே வசிப்பான். "ஸதாசார"மென்றால் 'நல்லொழுக்கம், நன்னடை'; ஸதாசாரமே பக்திக்கு வித்து என்பது ஆழ்வார், ஆசார்யர்கள் கருத்து.

அந்த நாளில் உடம்பையும் உள்ளத்தையும் ஒருங்கே சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தக்கூடிய வசதிகள் இருந்தன; திருப்பதிகள் என்ற திவ்ய ஸ்தலங்களிலே. அங்கே "நல்லார்" கூடி வாழ்ந்து ஒருமுகமாக ஈச்வரனை வழிபட்டுக்கொண்டிருந்தார்களென்று ஆழ்வார்கள் குறிப்பிடுகிறார்கள்.

கொக்கு வெள்ளையாக இருக்கிறதல்லவா! "வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை." பக்தர்கள் கள்ளங் கவடறியாத குழந்தை யுள்ளத்தோடு நீறுபூத்த நெருப்பைப்போல் பரம ஸாத்விகர்களாக இருப்பார்களாம்.

நல்லாரோடு தோழமை கொள்வதிலும், நல்லாசிரியரைத் தேடிக் காண் பதிலுங்கூட, "ஓடுகிற மீன்களை ஓடவிட்டுத் தனக்குவேண்டிய மீன் வருமளவும் காத்திருக்கும்" கொக்கின் நிலைமையை ஞாபகப்படுத்திக்கொள்வார்களாம்.

கோழிபோலிருப்பான்

பக்தன் கோழிபோலிருப்பான் என்று சொன்னாரல்லவா? கோழி என்ன செய்கிறது? குப்பையைக் கிளறிக் கிளறித் தானியமணிகளைப் பொறுக்கும் கோழி, குஞ்சுகளுக்கு ஊட்டித் தானும் உண்டு பசி ஆறுகிறது. இப்படியே பக்தர்களும் வேத சாஸ்திரங்களிலுள்ள ஸாரமான மணிகளைப் பிறருக்கும் வழங்கித் தாங்களும் அனுபவித்து மகிழ்வார்களாம். இவ்விதமான காரியத்தை ஆழ்வார்கள், காலத்தின் தேவைக்குத் தக்கபடி விசேஷமாகச் செய்து முடித் திருக்கிறார்கள் என்பது வைஷ்ணவர் கொள்கை.

"உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்!" என்று வாழ்ந்த **"நம்மாழ்வாரும்**, "உண்ணாத நாள் பட்டினி நாளன்று: பக்தி பண்ணாத நாளே பட்டினிநாள்!" என்று வாழ்ந்த **பெரி யாழ்வாரும்**, மற்ற ஆழ்வார்களும் தாங்கள் கண்ட உண்மைகளைப் பிறருக்கு வழங்குவதில் எவ்வளவு சிரத்தையுள்ளவர்களா யிருந்தார்கள்! இதற்காகவே அவர்கள் பால்போன்ற தமிழில் பண்சுமந்த பாடல்களைப் பாடிவைத்திருக் கிறார்களாம்.

வேதாந்தம் கலையானது

...தமிழின் இசை மாலைகள் கொண்டு, தொண்டீர்!
வருநீர் வையம்உய்ய, இவைபாடி ஆடுமினே!

என்று **திருமங்கையாழ்வார்** சொல்லுவதைக் கேளுங்கள். இயலும் இசையு மான இந்தப் பாடல்களை அபிநயத்துடன் பாடுவது, பழைய வைஷ்ணவ ஆசாரியர்களால் மதப்பயிற்சியின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது.

"இசையின்பமும் ஈச்வரன்தான்; இன்பப்பாடலும் ஈச்வரன்தான்!" என்று கருதியவர்கள் வேதம் தமிழ் செய்தார்கள் என்றால், வேதாந்தத்தைக் கலையாக்கிப் பலருக்கும் வழங்கினார்கள் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். வேதமாகிய பாற்கடலைத் தமது நாவினால் கடைந்து, "தமிழாயிரம்" என்றும், "பண்கள் ஓராயிரம்" என்றும் சொல்லக்கூடிய அமிர்தத்தை விஷ்ணு பக்தர் - கூட்டம் களித்து உண்ணும்படி நிறைத்தருளினார் நம்மாழ்வார்-என்பார் **பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்**. தத்துவம் பாற்கடல் என்றால், அதிலிருந்து பிறந்த கலையை அமிர்த மென்று சொல்வது பொருத்தந்தானே?

மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் நம்மாழ்வார் வேதாந்தக் கொள்கைகளை அதிகமாகவும், தெளிவாகவும், திருந்திய வடிவத்துடனும் உபயோகித்துக் கொள் கிறார். இந்தக் கொள்கைகள் உபநிஷதங்களையும் பகவத்கீதையையும் தழுவி அமைந்திருக்கின்றன.

பகவான் தேவகி வயிற்றில் வசித்ததுபோல், உபநிஷதங்களிலும் திருவாய் மொழிப் பாடல்களிலும் வசிப்பதாகச் சொல்லுகிறார் ஒரு வைஷ்ணவ ஆசிரியர். உபநிஷதங்கள் என்ற பசுக்களைக் கோபாலன் அர்ச்சுனனாகிய கன்றை முன் னிட்டுக் கறந்து, கீதையென்ற பாலாகக் கொடுத்தருளினான் என்றும் சொல்வ துண்டு. இந்தப் பாலைக் கடைந்து அந்தக் கோபாலனுக்கும் உலகத்திற்கும் ஒருங்கே உகப்பான வெண்ணெய் ஆக்கினார்கள் ஆழ்வார்கள் என்று பக்தர்கள் சொல்லக்கூடும். கறந்த பால் தத்துவமென்றால், கடைந்த வெண்ணெயைக் கலை யென்று சொல்லலாம்.

நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக்கெல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே!

என்பது நம்மாழ்வார் கொள்கை. ஈச்வரனே கலைகளுக்கு உயிராகவும், உடம்பாகவும் இருக்கிறான்.

நாவியல் கலைகள் என்கோ ?

என்று கடவுளை வர்ணிக்கிறவர்,

கலைப்பல் ஞானத்(து) என் கண்ணனைக் கண்டுகொண்டு,
நிலைப்பெற்(று) என் நெஞ்சம் பெற்றது நீடுயிரே

என்று உறுதி கூறினர். கலைகளிலேயுள்ள ஞானப்பிரானைக் கண்டுகொண்டு நெஞ்சும் உயிரும் நிலைபெற்றன என்கிறார். எனவே, தத்துவத்தைக் கலையாகக் கண்டு காட்டுகிறவர் நம்மாழ்வார் என்ற கொள்கையை அவர் வாக்கே ஆதரிக்கிறது. பகவானே மாயக் கவியாகத் தமது நெஞ்சிலே வந்து தம்மைப் பாடிக் கொண்டானென்றுஅவர் கூறுவதும் இந்தக் கொள்கைக்கே ஆதாரமாகிறது.

நம்மாழ்வாரைப்போல் மற்ற ஆழ்வார்களும் தத்துவத்தைக் கலையாக்குகிறார்கள் என்று சொல்லலாம். குணமற்ற, - அறியமுடியாத, - அணுகமுடியாத் - தானும் அணுகிவராத பரப்பிரமத்தைக் கருணைக்கடலான, - அன்புருவாகிய, அழகனுக்கிப் பாவிகளும் மனம் உருகித் திருந்தி உபாஸிக்கும்படிச் செய்திருக்கிறார்களல்லவா இவர்களெல்லாம்? நீலமேனி, பச்சைவண்ணம், கவித்தமுடி, கமலச் செங்கண், பவளவாய், புன்முறுவல், "அஞ்சேல்!" என்ற கை, அடைக்கலம் அருளும் பாதமலர்--என்றெல்லாம் இவர்கள் கடவுளை வருணிக்கும்போது, தூரம் எவ்வளவு சமீபமாகிவிடுகிறது!

கலை, இயற்கை, கடவுள்

ஆகாசம் சமுத்திரம் இவற்றின் எல்லையில்லாத நீலத்திலே பார்க்கிறோம் பகவானுடைய "நீலமேனி"யை. அந்தப் "பச்சை"தான், பூமியை அலங்கரிக்கும் புல் பூண்டு மரம் செடி கொடிகள் முதலியவற்றின் இனிமையான இயற்கையழகு. 'நீண்டமுடி' அகிலலோக ஆட்சிக்கும், நீண்ட தோள்களும் சதுர்ப்புஜங்களும் பரந்த மார்பும் ஸர்வரட்சக சக்திக்கும் அறிகுறி. இளநகையும் செந்தாமரைக் கண்களும் அன்புகாட்டி அழைக்க, மகர குண்டலம் இலங்கும் காதுகள் பிரார்த்தனைகளைப் பரிவுடன் கேட்கின்றனவாம். யோகக்ஷேமம் வினவத் துடித்துக்கொண்டிருக்கும் பவள வாய், அந்த அடிமலர்களில் சரணகதி செய்வதே பிழைக்கும் வழியென்று உபதேசிக்கிறதாம்.

இப்படிப்பட்ட கடவுளுக்கு ஜீவர்களும் ஜடமுமாயிருக்கும் இயற்கையெல்லாம் உடம்பு என்ற கொள்கை வைஷ்ணவத்தில் மிகவும் முக்கியமானது. புலனாகும் உடம்பைக்கொண்டு, புலனாகாத உயிர் உண்டென்று உணர்வதுபோல், உடம்பாகிய இயற்கையைக் கொண்டு உயிராகிய கடவுளுண்மையை உணர்ந்துகொள்ளலாமல்லவா? இதுவும் ஒரு முக்கியமான காரணமாயிருந்திருக்கலாம், இயற்கை யழகு நிறைந்த பிரதேசங்களில் நம் முன்னோர் கோயில் கட்டி அந்த ஸ்தலங்களைத் திவ்ய தேசங்களென்றும் திருப்பதிகளென்றும் கொண்டாடியதற்கு. தத்துவத்தைக் காட்டிலும் கலைகளைக் கொண்டு ஆஸ்திக உணர்ச்சியை லேசாகப் பரப்பிவிடலாமென்பது தெளிவான போது, பக்தியும் நம்பிக்கையும் கல்லிலே இந்திர ஜாலம் காட்டிக் கோயில்களைப் பிரமாண்டமான சிற்பக் களஞ்சியமாக்கிவிட்டன!

அந்தச் சிற்றுளிகள் அவ்வளவு அற்புத சக்தியும் ஆவேசமும் பெற்றதற்குத் தான் முக்கிய காரணமாயிருந்தவர்கள் யார்? பக்திப் பிரபந்தங்கள் என்ற ஞானப் பூங்கோவில்களை நிர்மாணம் செய்த சிற்பிகளான ஆழ்வார்கள்தானே!

பி. ஸ்ரீ. எழுதிய அரிய நூல்கள்

கம்பசித்திரம் (பாலகாண்டம்) ரூ. 7.
திவ்யப் பிரபந்த ஸாரம் ரூ. 2.

கிடைக்கும் இடம்:—"அச்வின்ஸ்" ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார் ரோட், ஆழ்வார்பேட்டை, சென்னை.

வெள்ளம்

("பச்சைமலை" மெட்டு)

கட்டறுத்துக் கரைஉடைத்துக் காடுபுகும் வெள்ளம்,
முட்டுமத யானையென முரட்டுநடை கொள்ளும்.
காடழித்துக் கரம்பழித்து நாடுபுகும் வெள்ளம்,
காலழித்து வரப்பழித்துக் கடுகிவரும் வெள்ளம்.
நாடழித்து நஞ்செய்புஞ்செய் பாழடிக்கும் வெள்ளம்,
நல்லவர்க்கும் அல்லவர்க்கும் நஷ்டம்வைக்கும் வெள்ளம்.
சண்டைசெய்யும் மன்னரெனத் தண்டெடுக்கும் வெள்ளம்,
கண்டதெல்லாம் கொள்ளையிட்டுக் கொண்டுசெல்லும் வெள்ளம்.
கட்டிவைத்த வீடழித்துக் கிட்டிவரும் வெள்ளம்,
கட்டுக்காவல் கடந்துவந்து கலங்கடிக்கும் வெள்ளம்.
கொள்ளையிடும் கள்ளரெனக் குறுகிவரும் வெள்ளம்,
மெள்ளவந்து கன்னமிட்டு வீடுபுகும் வெள்ளம்.
காத்துவைத்த பண்டமெல்லாம் கண்டெடுக்கும் வெள்ளம்,
கூத்தடித்துக் குதுகலித்துக் கொந்தளிக்கும் வெள்ளம்.
துஷ்டத்தனப் பிள்ளையெனத் தொடர்ந்துவரும் வெள்ளம்,
சட்டிபானை தட்டியுருட்டிக் கொட்டமிடும் வெள்ளம்.
பட்டணங்கள் பார்த்துவரப் பயணமாகும் வெள்ளம்,
கட்டிலொடு மெத்தையெலாம் மூட்டைகட்டும் வெள்ளம்.
குறும்புசெய்யும் குரங்கினம்போல் குதித்துவரும் வெள்ளம்,
புறக்கடையில் தோட்டமெலாம் புகுந்தழிக்கும் வெள்ளம்.
பூத்தபூவும் பிஞ்சுமான பூண்டுசெடி கிள்ளி,
பார்த்ததெல்லாம் ஆய்ந்தறியப் பாய்ந்துவரும் வெள்ளம்.
சீரிழந்த காமுகர்போல் பேரிழந்த வெள்ளம்,
காரையிட்ட வீடுதோறும் கதவுதட்டும் வெள்ளம்.
குண்டோதர னெனவந்து குண்டுவயிற் றுள்ளே,
உண்டுவிடும் ஊரிலுள்ள உணவனைத்தும் வெள்ளம்.
உறங்கஇடம் இல்லையென்று ஓலமிடும் வெள்ளம்,
அறங்கடந்த அரசரது ஆட்சிகொள்ளும் வெள்ளம்.
பஞ்சமென்று பறையடித்துப் பாடிவரும் வெள்ளம்,
சஞ்சலமென் றலையெழுப்பும் வஞ்சமன வெள்ளம்.

—பி. ஆர். ராஜசூடாமணி.

ஸ்ரீமதி. நீ. ல. பட்டம்மாள், பம்பாய்.

இந்திரஜாலம்

"பங்கஜம்! ஏனம்மா, நீ இன்னும் தூங்காமல் தரையில் படுத்துக்கொண்டு உன் உடம்பை கெடுத்துக்கொள்கிறாய்? நீ இவ்விதம் இருந்தால் உன் உடம்பு தேறுவது எப்படி? நான் எவ்வளவு சொல்லியும், நீ கேட்கவில்லை. உன் மனதை சந்தோஷப்படுத்த அம்பிகை காத்துக்கொண்டிருக்கிறாள். கவலைப்படாதே" என்றான் ரகு.

பங்:—அண்ணா! அவரைப்பற்றி உனக்கு ஏதாவது தெரிந்ததா! அப்பா சம்மதித்துவிட்டாரா? உன் தைரிய மொழிகளால்தான் நான் இவ்வளவாவது இருப்பது. உன் ஆதரவில்லாவிட்டால் எனக்கு நடப்பதற்குக்கூட சக்தியில்லா மலல்லவா போய்விடும்.

ரகு:—பங்கஜம்! அப்பாவின் சம்மதத்தைப்பற்றி உனக்குக் கவலைவேண்டாம். கடவுள் உனக்கு இப்பொழுது எல்லாவற்றையும் நன்மையாகவே செய்து கொண்டு வருவதாகத்தான் என் எண்ணம். என் அருமை சகோதரியாகிய உன் மனதை சந்தோஷப்படுத்துவதுதான் என் கடமை. அதை எவ்விதமாகிலும் செய்துமுடிப்பேன். நீ கவலைப்படாமல் தூங்கு. உன் உடம்பை கெடுத்துக் கொள்ளாதே— என்று ஆறுதல் கூறிவிட்டு படுக்கச்சென்றான்.

மறுநாள் காலை பங்கஜத்தின் தகப்பனார், 'ரகு! உன் தங்கைக்கு எந்த வரனும் சரியாக அமையவில்லையே, நாட்களோ ஆகிக்கொண்டே இருக்கின்றன. என்ன செய்வதென்று தெரியவில்லை" என்றார்.

ரகு:—அப்பா! நான் அப்பொழுது உங்களுக்கு எவ்வளவு சொல்லியும் நீங்கள் வாஸுவை மிகவும் இளக்கரமாக நினைத்துவிட்டீர்கள்.

தக:—ரகு! அவனுக்கு உத்யோகம் கிடைத்தால்தானேப்பா சோறு, அது இல்லாவிட்டால் அவன் பிச்சையல்லவோ எடுக்கவேண்டும்?

ரகு:—அப்பா! என்மேல் கோபம் கொள்ளாதீர்கள். நமக்கிருக்கும் இவ்வளவு சொத்துகளில் கொஞ்சம் அவர்களுக்குக் கொடுக்கலாமென்று நான் சொன்ன பொழுது உங்களுக்கு ரொம்ப கோபம் வந்துவிட்டது. என் அருமைத் தங்கையே, தம்பியாகப் பிறந்திருந்தால், பாதி அவனுக்குக் கொடுக்கவேண்டாமா? மேலும் நீங்கள் வாஸுவை அல்பமாகவும் நினைத்துவிட்டீர்கள். அவனுக்கு சொத்தே வேண்டாம். அவன் குணத்திற்கே போட்டி போட்டுக்கொண்டு பெண் கொடுப் பார்கள். இனி அதைச் சொல்வதில் என்ன பிரயோஜனம்? நேற்று எதிர் வீட்டு அண்ணாவை ஏதோ வரனைப்பற்றி விசாரித்தீர்களே அது என்னவாயிற்று?

தக:—ரகு! நீ சொல்லுவது வாஸ்தவந்தான். பணத்திற்கு எவ்வளவு மதிப்பு என்பதை நேற்றுதான் அறிந்தேன். உள்ளன்போடு இருந்தவர்களைப் பிரித்ததால் தான் எனக்கு இவ்வளவு அலைச்சல் ஏற்பட்டது. நேற்று அண்ணாவைக் கேட்ட தில் அவருக்கு ஏதோ உறவில் ஒரு பையன் இருக்கிறானாம். படிப்பு மிகவும் குறைவுதான். ஏதோ ஒரு வேலையில் ரூ 30. சம்பாதித்துக்கொண்டிருக்கிறானாம். அவனை விசாரித்ததில், அவன் சொன்ன பதிலைக் கேட்கும்பொழுது என் மனம் வெடித்துவிடும்போல் இருக்கிறது. அவனுக்கு பணம் பெரிதல்லவாம், நாம் அவ னுக்கு எவ்வளவு கொடுத்தாலும், நோயாளியான பெண் வேண்டாமாம். இனி அந்த வரனைப்பற்றி யோசிக்க வேண்டாமாம். நம் பங்கஜத்திற்கு வரும் மயக்கம் ஊர் முழுவதும் தெரிந்திருக்கிறது. ஆகையால் எவரும் முன்வந்து அவளைக் கல்யாணம் செய்துகொள்ள சம்மதிக்கமாட்டேன் என்கிறார்கள். என் கண்மணி யின் வாழ்விற்கு நானே சத்ருவாக இருந்தேன். ரகு! வாஸு இப்பொழுது எங்கு இருக்கிறான் என்றாவது, கல்யாணமாகிவிட்டதா என்றாவது தெரியுமா? அப்படி கல்யாணமாகாமலிருந்தால் அதை முயற்சி செய்து பார்க்கலாமா!

ரகு:—அப்பா! அவனை நீங்கள் எவ்வளவு அல்பமாக நினைத்தீர்களோ, அதற்கு எதிராக இப்பொழுது பங்களூரில் நல்ல சம்பளத்தில் இருக்கிறான்.

போன மாதம் அவனுக்கு கல்யாணமும் நடந்தது. கல்யாணக் கடிதத்திலும் பங்கஜத்தை நினைத்து வருந்தி எழுதியிருந்தான். இனி என்ன செய்வது ?

தக:—என்ன! அவனுக்குக் கல்யாணமாகிவிட்டதா? ஐயோ! என் கண்மணிகளைப் பிரித்த பாவத்தை எங்குபோய் தீர்ப்பேன்! இனிமேல் நான் என்ன செய்வது! எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. வாஸுவையே ஏதாவது நல்ல வரனைப்பார்த்து சொல்லச் செல்லு. அதிலாவது என் கண்மணியின் மனம் சற்று நிம்மதியடையும்.

ரகு:—அப்பா! நீங்கள் சொல்வதை நானே உங்களைக் கேட்காமல் செய்து இருக்கிறேன். வாஸுவே இன்னும் 2 நாட்களில் இங்கு வரலாம். ஆகையால் அவன் வந்ததும் நேரிலேயே எல்லாவற்றையும் சொல்லி என் அருமைத் தங்கைக்கு நல்ல வரனைப் பொருக்கிவிடுகிறேன்...இம்மாதிரி சொல்லிக்கொண்டிருக்கும்போது ஓர் தந்திச் சேவகன் ரகுவிடம் ஓர் தந்தியைக் கொடுத்தான்.

தந்தி என்ற பதத்தைக் கேட்டதும் எல்லாரும் கலவரமடைந்தார்கள். அதில் வாஸு கிளம்பிவிட்டதாகவும், ஸ்டேஷனுக்கு வரும்படியாகவும் இருந்தது.

ரகு:—அப்பா, பார்த்தீர்களா? வாஸு நாளைக்கே வருகிறானும், ஸ்டேஷனுக்கு என்னை வரும்படி தந்தி கொடுத்திருக்கிறான்.

தக:—அப்பா, ரகு! நானும் நாளைய தினம் உன்னுடன் ஸ்டேஷனுக்கு வருகிறேன். வாஸுவை நானே வரவேற்றால்தான், நான் செய்த பாவத்திற்குச் சிறிது சாந்தி செய்ததாக ஏற்படும்.

மறுநாள், ரகுவும் அவன் தகப்பனாரும் ஸ்டேஷனுக்குப் போனார்கள். வாஸு வெகு தடபுடலுடன் இரண்டாவது வகுப்பிலிருந்து ஒரு பெண்மணியுடன் இறங்கினான். அவளைப் பார்த்ததும், ரகுவின் தகப்பனார் அப்படியே அசந்து நின்றுவிட்டார். "ஆகா! என்ன அழகு! எவ்வளவு அடக்கம்? இந்த பெண்ணிற்கு நம் பங்கஜம்கூடக் குறைந்துவிடுவாள்போலல்லவா இருக்கிறது! நான்தான் கொடுத்துவைக்கவில்லை" என்று மனதை கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கும்பொழுது "மாமா! சவுக்யமா? பங்கஜத்தை ஏன் அழைத்துவரவில்லை? மாமி சௌக்கியம்தானே!" என்றான் வாஸு.

தக:—அப்பா வாஸு! பங்கஜத்திற்கு உடம்பு சரியில்லை. நீதான் வரப் போகிறாயே என்றுதான் அவளை அழைத்துக்கொண்டு வரவில்லை. வா போகலாம்.

வாஸு:—மாமா! நான் இப்பொழுது உங்களுடன் வரமுடியமாலிருக்கிறது. என் சிநேகிதன் ஒருவன் வீட்டிற்கு வெகு அவசரமாகப் போகவேண்டியிருப்பதால், நான் மாலை 3-மணிக்கு கட்டாயம் வருகிறேன். நான் நேராக வீட்டுக்கு வரமுடியாததால்தான் ரகுவை ஸ்டேஷனுக்கு வரும்படித் தந்தியடித்தேன். பங்கஜம் வருந்தப்போகிறாள். நான் 3-மணிக்குக் கட்டாயம் வருவதாகச் சொல்லுங்கள்—என்று விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

வீட்டிற்கு அவர்கள் மாத்திரம் தனியாக வருவதைப் பார்த்த பங்கஜம், "அப்பா! ஏன் அவர் வரவில்லையா?" என்று வெகு துடிப்புடன் கேட்டாள். "அம்மா! அவன் அவசரமாக ஒரு சினேகிதன் வீட்டிற்குப் போகவேண்டுமாம். அதனால் சாயங்காலம் 3 மணிக்கு வருவதாகச் சொன்னான். பங்கஜம்! நான் மிகவும் அதிருஷ்டமற்றவன். விலையில்லா மாணிக்கத்தை நான் அடையப் பெறவிருந்தும் என் மூடத்தனத்தால் வேறு ஒருவருக்குக் கொடுத்துவிட்டதை நினைக்க மிகவும் வருத்தமாக இருக்கிறது. வாஸு நல்ல அதிருஷ்டசாலி என்பதில் சந்தேகமில்லை. அவனுடைய மனைவி உன்னைவிட சகல லக்ஷணங்களிலும் உயர்வாகவே இருக்கிறாள்.

பங்கஜம்:—என்ன! அவருடைய மனைவியா? அவருக்குக் கல்யாணமாகி விட்டதா? எப்பொழுது ஆயிற்று?

தக:—உனக்குத்தெரியாதா? போனமாதம்தான் கல்யாணம் ஆயிற்றென்று ரகுதானே சொன்னான். உன்னிடம் சொல்லவில்லையா? ஏனப்பா ரகு! அவளுக்குச் சொல்லவில்லையா?

ரகு:—அப்பா! இதை ஏன் நாமே அவளிடம் சொல்லி அவள் மனத்தைப் புண்படுத்தவேண்டும்? வாஸு வரும்பொழுது எல்லாம் தெரிந்துவிடும் என்று பேசாமலிருக்கிறேன்.

பங்:—அண்ணா! நீ கூடவா என்னை ஏமாற்றிக்கொண்டிருக்கிறாய்? இத்தனை நாளும் எனக்குச் சொன்னதெல்லாம் பொய்யா? என் மனத்தை சந்தோஷப்படுத்தாமல் ஒரேயடியாய் என்னை கிணற்றில் தள்ளியிருக்கலாமே. மனப்பூர்வமாக நம்பிய என்னை, இவ்விதம் பொய் சொல்லியா ஏமாற்றுவது!— என்று சொல்லிக்கொண்டே நிற்கமுடியாமல் தன் அறைக்குச் சென்றாள்.

சரியாக 3 மணிக்கெல்லாம் வாஸு வந்து சேர்ந்தான். ரகுவின் தகப்பனார் அவனை வரவேற்று "வா, வா, வாஸு! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். எங்கு ஏமாற்றிவிடுவாயோ என்று பயந்தேன். ஏன் நீ மாத்திரம் ஒண்டியாக வந்திருக்கிறாய்? நான் உன்னை மோசம் செய்தாலும், நீயும் என்னை அவ்விதம்தான் செய்வதா! எங்கே உன் அருமை மனைவி? உன் மாமி பார்க்க வேண்டுமென்று வெகு ஆவலாயிருக்கிறாள்" என்றார்.

வாஸு:—என்ன! என் மனைவியா? என்னைப் பரிகாசம் செய்கிறீர்களா? என் மனைவியை நீங்களல்லவோ காட்டவேண்டும். பங்கஜம் எங்கே?

தக:—ரகு உனக்குக்கல்யாணமானதாகச் சொன்னானே. ரயிலில் உன்னுடன் வந்த பெண்மணி யார்? அவள் உன் மனைவி என்றல்லவோ நினைத்தேன்.

வாஸு:—மாமா! அவள் என் மனைவியல்ல, உங்களால்தான் எனக்கு மனைவி வரவேண்டும். அவள் என் சினேகிதனின் மனைவி. அவர்கள் வீட்டி விருந்துதான் இப்போது வருகிறேன். ரகு! என்ன வேடிக்கையப்பா இது! என்னை உடனே வரச்சொல்லி தந்தி அடித்துவிட்டு இவர்களுக்கு எனக்குக் கல்யாணமாகிவிட்டதாகச் சொல்லியிருக்கிறாய்!...வாஸுவின் பேச்சைக்கேட்ட எல்லாரும் ஒன்றும் புரியாமல் திகைத்தார்கள்.

ரகு:—அப்பா! என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். என் அருமைத் தங்கையின் க்ஷேமத்தைக் கோருவது நமது கடமை. உங்களிடத்தில் விரோதித்துக் கொண்டாலும், நம் பங்கஜத்தின் சந்தோஷத்தை பங்கப்படுத்தக்கூடாது என்பது என் கொள்கை. ஆதலால்தான், இவ்விதமாகச் செய்யும்படி நேர்ந்தது. எதிர் வீட்டு அண்ணாவையும், அவ்விதம் சொல்லும்படியாக நான்தான் செய்தேன். அதன் பிறகுதான் உங்கள் மனமும்மாறியது. அன்புள்ள தம்பதிகளைப் பிரிப்பதினால் எவ்வளவு கெடுதல்கள் நடப்பது என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. அவ்விதம் தெரிந்தும் உங்கள் பணத்தின் மோஹத்தால் அதை நீங்கள் யோசிக்காமல் நடந்துகொண்டீர்கள். பங்கஜம் வாஸுவினிடமிருக்கும் அன்பை மாற்ற முடியாது என்பதைக்கண்டு கடவுள்மேல் பாரத்தைப்போட்டு இவர்களை எவ்விதமாகிலும் ஒன்றாகச் சேர்க்கவேண்டுமென்று, இதில் இறங்கினேன். ஏதோ பகவான் கிருபையாலும், உங்கள் ஆசீர்வாதத்தாலும் எல்லாம் நன்றாக முடிந்துவிட்டது. இனி இவர்களை தம்பதிகளாக்க யோசிக்கமாட்டீர்களல்லவா!"

தக:—அப்பா ரகு! உனக்கிருக்கும் அன்புகூட தகப்பனாகிய எனக்கு இல்லாமல் போய்விட்டது. இனி எல்லாம் உன்பாடு. அவர்களை அன்போடு ஆசீர்வதிப்பதுதான் என் வேலை.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்த பங்கஜத்தின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. "ஐயோ! சிறிது நேரத்திற்கு முன், நம் அண்ணாவை புளுகன் என்றல்லவோ நினைத்தேன். இப்போது எனக்கு, அண்ணா பேசும் தெய்வமாய் இருக்கிறானல்லவா! உலகில் எனக்குக் கிடைத்திருக்கும் உண்மையான சகோதரனைப்போல் எல்லோருக்கும் இருந்தால் ஒருவித கஷ்டமும் ஏற்படாது" என்று மனதிற்குள் நினைத்து, "அண்ணா! உனக்கு என் சந்தோஷத்தை எப்படித் தெரிவிப்பது என்பதே தெரியவில்லை. உன் **இந்திரஜாலம்**தான் எனக்கு மகோன்னத நிலைமையை யளித்தது.

ஸ்ரீமதி. வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

சாரதாம்பாளுக்கு, ஸ்வாமிக்கு பூஜைசெய்வது, பஜனைசெய்வது என்றால் மிகவும் ப்ரியம். அன்று வெள்ளிக்கிழமையாயிருக்கவே கட்டாயம் பூஜை செய்யவேண்டுமென்று காலையிலேயே எழுந்து மங்களஸ்நானம் செய்து, பெண் குழந்தைகளுக்கெல்லாம் அவசர அவசரமாய் ஸ்நானம் செய்துவிட்டுப் பூஜையில் வந்து அமர்ந்தாள்.

ஸ்வாமி சந்நிதியில் நிறைய விளக்குகள் எரிவதையும், ஸ்வாமிக்கு சமர்ப்பித்திருக்கும் புஷ்பமாலைகளின் அழகையும் பார்த்த சாரதாவின் மனம் பக்தி உணர்ச்சியால் பூரித்து 'இன்று மனஸ் த்ருப்தியாய் பூஜைசெய்வது' என்று நினைத்துக்கொண்டு ' தேவ்யுவாசா தேவதேவ'' என்று ''லக்ஷ்மி அஷ்டோத்திர''த்தைச் சொல்ல ஆரம்பித்தாள். அப்பொழுது சமையல்காரன் ''அம்மா! சமையல் என்ன செய்வது?'' என்று கேட்டுக்கொண்டே வந்தான், அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு மேலே ''மஹாதேவ த்ரிகாலக்ஞ மஹேச்வரா'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது, ''அம்மா! அம்பி என் காப்பியை கொட்டிட்டான்; நேக்கு வேறே காப்பிதாம்மா!'' என்று அழுதுகொண்டே ஒருபையன் வந்தான். சாரதா வேறே காப்பி தந்து ''தம்பி சின்னவன்தானேம்மா! தெரியாமல் கொட்டிவிட்டான்'' என்று சமாதானம் சொல்லித் திரும்பவும் பூஜைக்கு வந்து, **கருணாகர தேவேச பக்தானுக்ரஹகாரக** என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது யாரோ 'அம்மா!' என்று கூப்பிடுவதுபோல் இருந்தது. வெளியேவந்து பார்த்தாள். வேலைக்காரன் 'அம்மா! காய்கறிகள் வாங்கிவந்தேன். மொத்தம் 12 அணு ஆச்சு' என்று கணக்கு சொல்ல ஆரம்பித்தான். சாரதாவுக்கோ கோபம் வந்தது. ''எனக்கு கணக்குவேண்டாம்; ஒன்றும்வேண்டாம். எல்லாம் உள்ளே வை'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் பூஜைக்கு வந்தாள்.

''அம்பிகே! இந்ததரமாவது முடியும்படி க்ருபை செய்யேன்'' என்று வேண்டிக்கொண்டே **அஷ்டோத்தரசதம்லக்ஷ்ம்யா:** என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது பக்கத்தாத்து கமலா ''எங்க தம்பிக்கு காதுகுத்தப்போரா; வெத்தலை பாக்குவாங்கோ'' என்று அழைப்பதற்குவந்தாள். ''வரேம்மா!'' என்று அனுப்பி விட்டு'' **க்லீம்பீஜம் பதமித்யுக்தம் சக்திஸ்து புவனேச்வரி** என்று இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு பக்தியாய் சொல்கையில் ''அம்மா! மணி 9 ஆய் விட்டதே! எங்களுக்கு எப்போ தலைபின்னுவது? ஸ்கூலுக்குப் போகணுமே'' என்று பெண்கள்வந்து கத்தினார்கள். சாரதா மிகவும் வருத்தமாய் ''லக்ஷ்மீ! உன் க்ருபை இவ்வளவுதானா?'' என்று சொல்லிவிட்டு ''நான் பூஜைசெய்வதற்குள் எல்லாருக்கும் அவஸரம் வந்துவிடுகிறது'' என்று வெறுப்புடன் திட்டிக் கொண்டே, பசங்களுக்கெல்லாம் தலைபின்னிவிட்டு பூஜை அறைக்குள் பிரவேசித்தாள். மேலும் பூஜை ஆரம்பிப்பதற்குள் வேலைக்காரன், ''அம்மா! ஐயாவுக்கு ஆபீஸுக்கு நேரம் ஆய்விட்டதாம். உங்களை வரச்சொன்னார்'' என்று கூப்பிட்டான். ''இதோ வருவதாகச் சொல்லு'' என்று ஆளை அனுப்பிவிட்டு ''தேவி! இவ்வளவுதான் நான்செய்த பாக்யமா? பூஜை முடிவதற்குள்ளா இத்தனை பங்கம் வரவேண்டும்!'' என்று கற்பூரஹாரத்தி செய்து விட்டு ''நாளையாவது கட்டாயம் பூஜையை முடிக்கும்படி க்ருபை செய்'' என்று கண்ணை மூடிக்கொண்டு ப்ரார்த்தித்துவிட்டு பழம், பால் நைவேத்தியம் செய்வதற்குப்போகையில் குழந்தை அதையெல்லாம் சாப்பிடுவதைப் பார்த்ததும், ஆத்திரத்தை அடக்கவேமுடியாதுபோனதால் குழந்தையை தடார்புடார் என்று நாலு அறை அறைந்துவிட்டாள். இவள் அடித்த வேகத்தில் குழந்தை பெரியதாக ராகம்பாட ஆரம்பித்தது. அதைக்கூடக் கவனியாமல் உள்ளேபோய் தளிகை யாவது எடுத்துவந்து அமுது பண்ணலாம் என்று ஓடினாள்.

[ராப்பர் 3-ம் பக்கத்தில் தொடர்ச்சி]

ஸ்ரீமதி தங்கம்மாள்-பாரதி

திரும்பிப் பார்

''அன்புள்ள சகோதரி !

தங்கள் கடிதம் வந்தது. என்னைப்பற்றிய குறிப்பு எழுதவேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். நான் என்ன எழுத? நானே எழுதினால் தற்புகழ்ச்சியே யாகும். சிறிதேனும் சாத்தியமான காரியத்தை, அன்புடையோர் கேட்டால் மறுப்பதும் அழகல்ல. "தற்புகழ்ச்சி செய்யாதே மூட நெஞ்சே!" என்று என் தந்தையார் அடிக்கடி கூறுவார். தன்னைப்பற்றி எழுதும்போது சற்று கை கூசத் தான் செய்கிறது. நான் என் சிறு குழந்தைப் பருவத்தை ஞாபகப்படுத்தி எழுத முயல்கிறேன். "திரும்பிப் பார்'' என்று ஒரு பெரியார் சொல்லியது ஞாபகம் வருகிறது. அதாவது நடந்த நிகழ்ச்சிகளை, திரும்பப் பார்த்தால் புதிய கருத் துக்கள் அந்தந்த சமயத்திற்கேற்ப விளங்கும்.

சோகமான நிகழ்ச்சி, ஆச்சரியகரமான சம்பவம், ஆனந்தமான அநுபவம், எல்லாவற்றையுமே திரும்பப் பார்த்தால் மனம் உவகை கொள்கிறது. "சோகம் நிறைந்தவற்றை மறுபடி நினைத்தால் சோகம்தானே யுண்டாகும். நல்ல விஷ யங்களைமட்டும் நினைத்தால் போதுமே'' என்றெண்ணலாகாது. அரிச்சந்திரன் கதை எத்தனை பழமையானது! எத்தனை சோகம் நிறைந்தது? அதை இன்றும் நாடகங்களிலோ, சினிமாவிலோ பார்க்கும்போது மனம் ஒரு புனிதமான உணர்ச்சியை அடைகிறது. பார்த்துவிட்டு வெளியில் வரும்போது "மயான காண்டம் வெகு ஜோர்'' என்கிறோம். நடந்ததை நினைத்துப் பார்ப்பதில் ஒரு ஆனந்தம் பிறக்கிறது. அதேபோல் கோவலன் கதையும் நம் மனத்தைக் கவரு கிறது. நான் சிறு வயதில் (ஆறு வயதிலிருந்து பன்னிரண்டு வயதுவரை) காசி வாசியாயிருந்தேன். எனது பெரிய தாயாருக்குக் குழந்தைகள் கிடையாது. என்னைத் தமது குழந்தையாகவே பாவித்திருந்தார். அவர் என்பேரிலுள்ள அன் பின் மிகுதியால், கடையத்திலிருந்த என்னை, என் தந்தையார் அநுமதி பெறாமலே காசிக்கு அழைத்துச் சென்றார். நான் காசிக்குப்போய் ஆறுமாதமானபின்புதான் தந்தையாருக்கு விஷயம் தெரியும். அவர் தினம் பராசக்தியை தியானிக்கும் சமயம், "தாயே! காசியிலிருக்கும் குழந்தையையும் காப்பாற்று'' என்று பிரார்த் திப்பாராம்.

காசியில் சிவமடத்தில் பெரியம்மாவும், அத்தையும் அன்புடன் என்னை வளர்த்தனர். பள்ளியில் ஹிந்தியும், ஸம்ஸ்கிருதமும் பயின்றேன். தந்தை அடிக்கடி கடிதம் எழுதுவார். அக் கடிதத்தில் தமதன்பு முழுவதையும் சிந்தியிருப் பார். எனது பெரியம்மாவின் பெயர் பார்வதி. அவருக்கு என்னை எப்படி வளர்க்கவேண்டும் என்பதுபற்றி கடிதம் எழுதுவார். ஓர் கடிதத்திலுள்ள பகுதி யொன்றைத் தருகிறேன்.

''அன்புள்ள பார்வதி !

உனது அளவிலா அன்பினை, மகிழ்ச்சியை, உன் உற்சாகத்தைக் கெடுக்கக் கூடாது என்று தீர்மானித்து, குழந்தையை இங்கு வரவழைக்க நான் எத்தனிக்க வில்லை. ஆனால், குழந்தை வளர்ப்பது மிக சிரமமான காரியம். "ஆயிரங்காலத் துப் பயிர்'' அல்லவா? என் குழந்தை மிகமிக சாந்தமான சுபாவமுள்ளவள். அவளுக்கு நீ எத்தனை "செல்லம்'' கொடுத்து வளர்த்தாலும் முரண்டு பண் ணவோ, அசடாகவோ மாட்டாள். நான் அதற்கொன்றும் பயப்படவில்லை. நீ முக்யமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் குழந்தை எதைப் பிரியமாய்த் தின்கிறாளோ, எதைக் கேட்கிறாளோ அதைக் கொடுக்கக்கூடாது. எது வேண்டா மென்று குழந்தை நினைக்கிறதோ அதைக் கொடுக்கவேண்டும். குழந்தைகள் தான் எதிர்காலத்தில் நாட்டின் க்ஷேமத்திற்குப் பொறுப்பாளி. அவர்களுக்கு சகிப்புத்தன்மை வேண்டியது அவசியம். அதனால்தான் நான் மேலே கூறியபடி

ஒரு திட்டமான முறையில் வளர்க்கவேண்டும். என் குழந்தையின் பிரிவை என்னால் தாங்கமுடியவில்லை''...

ஐந்தாறு வருடங்கள் சென்றபின் நான் கடையத்திற்கு வந்தேன். உடனே என் தாயார் வந்து என்னைப் புதுவைக்கு அழைத்துச் சென்றார். வீட்டிற்கு நான் சென்றபோது தந்தை தனியே இருந்தார். கதவு தட்டியவுடன் எழுந்து ஓடோடியும் வந்து கதவைத் திறந்தார். ''இதுதானா தங்கம்மா?'' என்று தாயாரிடம் கேட்டார். ''ஆம்'' என்றதும் ஓடிவந்து தழுவிக்கொண்டார். உச்சி முகர்ந்தார், கண்ணீர் பெருக்கினார்...இப்பொழுது அதை நினைத்துப் பார்த்தால்?... கதையாகிவிட்டது. உணர்ச்சிப் பெருக்கை நமது வார்த்தைகளினால் சொன்னால் ரசிக்காது. பாரதியின் வாக்கினால் சொல்லுகிறேன்.

''பண்டு நடந்ததனைப் பாடுகின்ற விப்பொழுதும்
மண்டுந் துயரெனது மார்பையெலாம் கவ்வுவதே !''

என் தங்கை சகுந்தலா (பாப்பா) குழந்தையாயிருக்கும்பொழுது வெகு நன்றாகப் பேசுவாள். பெரிய வக்கீலைப்போல் வாதிடுவாள். தந்தையாருக்கு எங்களைத் தர்க்கமிடச் சொல்லிப் பார்ப்பதில் ஆனந்தமதிகம். தந்தையார் தமது உபதேச மூலமாகவே எங்களுக்குக் கல்வி யளித்தார். தந்தையார் ஜீவியவந்தராயிருக்கும்போதே எனக்கு விவாஹமாகிவிட்டது. ஆந்திர ஜில்லாக்களிலும், அந்நிய நாடான சிங்கப்பூர், மலேயா முதலிய விடங்களிலும் என் கணவர் இருந்து வந்ததால் தமிழிற்கு சேவை செய்ய என் மனதில் எவ்வளவோ ஆவல் இருந்தும் முடியாமல் இருந்தது. பாரதியாரை—அவரது வாழ்க்கையை, உள்ளபடி உணரவேண்டும் என்று ஆசைப்படும் அன்பர்களுக்காக ''ஆனந்த விகடனில்'' சில குறிப்புகள் எழுதினேன். ரேடியோவில் ஒலி பரப்புவதற்காக ''பாரதியார் சரித்திரம்'' எழுதினேன். இப்போது சில மாதங்களாக பாரதியின் மன மலர்ச்சிக்கு, கவி உதயத்திற்கு ஆதிகாரணமான 'சுதேசமித்திர'னிலும் குறிப்புகள் எழுதிவருகிறேன்.

எனக்கு சரீரம் சற்று பலஹீனமானபடியால் சரிவர எழுத முடிவதில்லை. ஸ்திரீகள் முன்னேற்றத்திற்காக, கல்வி அபிவிருத்திக்காக, அரும்பாடுபட்டுவரும் ''ஜகன்மோஹினி'' நவயௌவனத்தோடு தமிழ் நாட்டில் திகழவேண்டுமென்று பராசக்தியைப் பிரார்த்திப்பதோடு, இந்தக் கடிதத்தை முடித்துக்கொள்கிறேன்.''

ஸ்ரீமான் பருத்திகுளம், எஸ். செல்லையா.

'அப்பூதி அடிகள்'

நெற்றி, மார்பு, கைகள் முதலியவற்றில் திருநீறைக் குழைத்து பூசிக்கொண்டு ருத்ராக்ஷ மாலையை, சிவசின்னமாக அணிந்துகொண்டு ஒருவர் தனியே யாத்திரை செய்துகொண்டு வருகிறார். அவரை உண்மையான சிவ பக்தர் எவராகிலும் கண்டால், அப்படியே அவரது பாதத்தில் விழுந்து வணங்கி அவரது ஆசீர்வாதத்தைப் பெற விரும்புவார்கள். அவ்வளவிற்கு அவரின் திருமுகத்தில் சிவகளை ததும்பி வழிகின்றது.

அந்த சிவனடியார் ஒவ்வொரு திவ்ய 'ஸ்தலத்தையும்' தரிசித்துக்கொண்டு வந்தார். வரும் வழியில் அமைக்கப்பட்டிருந்த ஒரு தண்ணீர்ப் பந்தல் அவரை வசீகரித்துவிட்டது. அப் பந்தலைப் பார்த்த சிவபக்தர் ஆச்சரியப்பட்டவாறு, ''ஏன் இந்த தண்ணீர்ப்பந்தலுக்கு, 'திருநாவுக்கரசு' என்று சூட்டிக்கொண்டார்கள்?'' என்று யோசித்தவாறு அங்கிருந்தவர்களை நோக்கி, ''இப் பந்தலுக்கு இப் பெயரைச் சூட்டி அமைத்தவர் யாவரோ?'' என்று வினவினார்.

அங்கிருந்தவர்கள், ''இப் பந்தலை அமைத்த பெரியார் வேறு இடங்களில் அமைத்திருக்கும் தம்முடைய தர்மசாலை, மடங்கள் முதலியவற்றிற்கும், 'திரு

நாவுக்கரசு' என்ற ஒரே பெயரைத்தான் சூட்டி மகிழ்கிறார். அவர் பெயர் **அப்பூதி அடிகள்,** சற்று நேரத்திற்கு முன்புதான் அடுத்திருக்கும் தமது வீட்டிற்குச் சென்றார்.'' என்று கூறினர்கள்.

சிவபக்தர், ''இந்தப் பெயரைச் சூட்டி அடியார்களுக்கு சேவை செய்ததில் என்ன விசேஷம் இருக்கலாம்?'' என்று யோசித்தபடியே, தண்ணீர் பந்தல் அமைத்த பெரியாரின் வீட்டைத் தேடிச் சென்றார். சிவபக்தர், பெரியாரின் வீட்டிற்கு எதிரில் வரும்போதே அப்பூதி அடிகள் சிவபக்தரைக் கண்டுவிட்டு, ''யாரோ ஒரு சிவபக்தர் தம் மனை நோக்கி வருகிறார்; அவரின் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும்'' என்று ஓடிவந்து, சிவபக்தரை வணங்கினர். சிவபக்தரும் அப்பூதி அடிகளை வணங்கினார்.

வணங்கியதும், அப்பூதி அடிகள், ''தாங்கள் கருணைகொண்டு இந்தக் கிரகத்தில் அடிவைக்க யான் என்ன தவம் செய்தேனே! இப்போது யான் என்ன செய்யவேண்டும் என்பதை உத்திரவிடவேண்டும்'' என்று உள்ளத்தில் பொங்கிய பக்திப் பரவசத்துடன் கேட்டார்.

அப்பூதி அடிகளின் சிவபக்தியை அறிந்த சிவபக்தர், ''யாம் திவ்ய ஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு வரும்போது, உம்முடைய தண்ணீர்பந்தலை நேரில் கண்டும், மற்றைய தருமங்களைச் சொல்லக் கேட்டபின் உம்மைக் காண வந்தோம்'' என்று கூறியதுடன், ''நீர் அமைத்த தண்ணீர் பந்தலுக்கு, உம்முடைய பெயரைச் சூட்டாமல், வேறொரு பெயரை என்ன காரணத்திற்காகச் சூட்டினீர்?'' என்று கேட்டார்.

அவ்வளவுதான் அப்பூதி அடிகளுக்குக் கோபம் பொங்கிவிட்டது. வந்தவரை எரித்துவிடுவதுபோல் நோக்கி, ''சிவவேடம் தரித்துக்கொண்டிருக்கும் உமக்கு, திருநாவுக்கரசு என்ற புனிதமான பெயரின் மகிமை தெரியாதா! திருநாவுக்கரசு என்ற பெயரா வேறொரு பெயர்? பிறவிக்கடலைக் கடக்க என்னைப்போன்றவர்களுக்கு நம்பிக்கையளித்தவர் பெயரை அறியாத சிவபக்தர்கள் உண்டா! சிவ கைங்கர்யத்தால் இம்மையிலும் பிழைக்கலாம் என்று அருள்புரிந்த திருநாவுக்கரசு பெயரையல்லவா சூட்டி மகிழ்கிறேன்! நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டதற்கா இந்தக் கடூரமான வார்த்தையைச் சொன்னீர்! ''பொறுமையும், பக்தியும் நிறைந்தவரின் பெயரையா வேறொரு பெயர் என்று அலட்சியமாய்க் கூறினீர்? என் மனதைப் புண்படச் செய்துவிட்டீர். நீர் யார்? எங்கிருந்து வந்தீர்!'' என்று ஆவேசம் வந்தவர்போல் கூறினர்.

அப்பூதி அடிகளின் பக்தியை அறிந்த சிவபக்தர், ''நீ யார்?'' என்று கேட்டதற்கு விடையாக அப்பூதி அடிகளை நோக்கி, அன்னியமதக் கடலைவிட்டுக் கரைசேரும்படி சிவபெருமான் அருள்புரிந்து ஆண்ட அடியேன் நான்!'' என்றார்.

சிவபக்தர் கூறிய மொழிகளைச் செவியுற்ற அப்பூதி அடிகள், பிரமித்துப் போய்விட்டார். இதுநாள்வரையிலும் கண்ணால்காணமல், பெயரைமட்டும்தெரிந்து அவரின் மகிமையை எண்ணியபடியே தம்முடைய தர்மசாலைகளுக்கும், தன் குமாரர்களுக்கும், வீட்டிலிருக்கும் சகலவிதமான சாமான்களுக்கும், 'திருநாவுக்கரசு'என்ற பெயரைச் சூட்டி ஆனந்தித்துக்கொண்டிருந்த, அப்பூதி அடிகளின் முன்னலேயே, அந்த 'திருநாவுக்கரசர்' வந்து நின்று, 'நான் திருநாவுக்கரசு' என்று மறைமுகமாய் சொன்னல், 'திருநாவுக்கரசு' பித்துகொண்ட அப்பூதி அடிகளின் நிலைமையை விவரிக்கமுடியுமா? தான் இவ்வளவு நேரமாய் அவரை, யார் என்று தெரியாமல் கடிந்துகொண்டதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்ளக்கூடத் தெரியாமல், பித்துகொண்டவரைப்போல் பேச நாவெழாமல் உடம்பெல்லாம் மயிர் சிலிர்த்து மௌனமாக நின்றார். மறு விநாடி சுய உணர்வைப் பெற்றவராய், திருநாவுக்கரசர் பாதத்தில் விழுந்து வணங்கினர். அவர், அப்பூதி அடிகளை பதில் வணங்கினர். ''என்னே பக்தியின் மகிமை! வைதிகப்பிராமணரான அப்பூதி அடிகள், வேளாளர் மரபில் உதித்த, திருநாவுக்கரசரை ஜாதிவித்யாசங்காட்டாமல் சிவனடியார் என்ற முறையில் வணங்கினர் என்றல் அவர் அடியார்களிடம்

கொண்டிருக்கும் பக்தியை யாரால் கூறமுடியும்? பக்தர்களை, ஜாதி வித்யாசம் காட்டி, "அதோ! அவன் தீண்டப்படாதவன், நீசன் என்று ஒரு பிராமணத் தன்மையுள்ளவர் மனதால் நினைத்தாலும் அப்படி நினைப்பவர் பிராமணத் தன்மையை இழந்துவிடுவார் என்பதை அப்பூதி அடிகள் நிரூபித்துக் காட்டினர்.

அவ்வளவுடன், அப்பூதி அடிகளுக்கு ஆனந்த வெறி வந்துவிட்டது. வீட்டிற்குள் ஓடி மனைவி மக்களிடம், திருநாவுக்கரசர் விஜயம் செய்திருப்பதைக் கூறி, தம் உறவினர்களிடமும் சொல்லி எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்து, திருநாவுக்கரசரின் பாதத்தில் விழுந்து வணங்கி, அவர் பாதம் சுத்தம் செய்த நீரை தீர்த்தமாகக் கொண்டு எல்லோரும் அத்தீர்த்தத்தை சிரசின்மேல் விட்டுக்கொண்டபின், திருநாவுக்கரசு சுவாமிகளை ஆசனத்தில் அமரச்செய்து அமுதுண்ண வேண்டிக்கொண்டார்கள். சற்று நேரத்தில் சமையல் ஆனதும் சுவாமிகள் கைகால் சுத்தம் செய்து திருநீறு இட்டுக்கொண்டு மற்றவர்களுக்கும் திருநீறு கொடுத்தார். அப்பொழுது அங்கு அப்பூதி அடிகளின் மூத்த குமாரனைக் காணுமையால், "உம் மூத்த குமாரன் எங்கே? அவன் திருநீறு பெற்றுக்கொள்ள வில்லையே!" என்று அப்பூதியாரைக் கேட்டார். அதற்கு அவர், "இப்பொழுது அவனுக்கு திருநீறு வாங்க பாக்கியமில்லை" என்றுர்.

திருநாவுக்கரசர் உள்ளம் அருள் நிறைந்த உள்ளமாதலால் அவர் உள்ளம் குழம்பியது. உடனே அப்பூதி அடிகளை நோக்கி, "என் உள்ளம் இந்த வார்த்தையை சகிக்காது; இதில் ஏதோ ஒரு காரணம் இருக்கத்தான்வேண்டும். உண்மையைக் கூறும்"என்றுர். "சுவாமிகள் அமுது செய்யத் தடை ஏற்பட்டுவிட்டதே இதற்கு என்ன செய்வது! இவரிடம் பொய்சொல்லக்கூடாதே, எவ்விதம் உண்மையை உரைப்பேன்!" என்று மனம் குழம்பி, இறுதியில் உண்மையைச் சொல்லத்தான்வேண்டும் என்று தோன்றியதால், திருநாவுக்கரசு சுவாமிகளை நோக்கி, 'சுவாமி! என் புத்திரன் மூத்த திருநாவுக்கரசை வாழைக்குருத்து அரிந்து கொண்டு வரும்படிக் கூறினேன். அவன் வாழைக்குருத்தை அரியும் சமயம் ஒரு பாம்பு அவன் கையில் தீண்டி விஷமேறப்பட்டவனுய் ஓடோடிவந்து வாழைக் குருத்தை அவன் தாயாரிடம் கொடுத்துவிட்டுக் கீழே விழுந்துவிட்டான். அவன் சவத்தை அப்புறப்படுத்தி வைத்திருக்கிறேம். சுவாமிகள் அமுது செய்ய இடையூறு ஏற்படுமோ என்று எண்ணியதால் இவ்விடத்தில் அவனைக் குறித்து இவ்வளவு நேரமாய் ஒன்றும் கூறவில்லை" என்றுர்.

அதைக்கேட்ட திருநாவுக்கரசர் திடுக்கிட்டுப்போய் எழுந்து, "நல்ல காரியம் செய்தீர்!" என்று கூறி சிவாலயத்தின்முன் பிணத்தைக் கொண்டுவரச்செய்து, விஷம் நீங்கவேண்டுமென்று திருவருளை நினைத்துப் பதிகம் பாடினர். பதிகம் பாடி முடிந்ததும், மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்றெழுந்து, 'திருநாவுக்கரசு சுவாமிகளை'வணங்கினன். அவர் மனம்மகிழ்ந்து, அவனுக்கு திருநீறு கொடுத்தார்.

அதன்பின், திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளின் வீட்டில் அவர்களோடு அமுது செய்து அங்கேயே பல நாள் தங்கியிருந்து பிறகு தமது யாத்திரையைத் துவக்கினர். அவர் திருப்பழனம் எனும் ஸ்தலத்தில் பாடிய பதிகத்தில் அப்பூதி அடிகளின் சிவபக்தியையும், வைதீகப்பற்றையும் பாராட்டிப் பாடியிருக்கிறர். அவ்விதம் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற அப்பூதி அடிகள் நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படுகிறர். சுபம்!

ப்ரமுகர்களான பல நண்பர்கள் உதவியால் பிரஸ் ஆரம்பித்துள்ளோம்!

* க்ரந்தம், தேவநாகரம், ஹிந்தி, *
தமிழ், ஆங்கிலம் அச்சுவேலைகளும்,
எவ்வித ரூலிங், பைண்டிங் வேலைகளும்

குறித்த காலத்தில் விரைவாகவும் நன்றாகவும் செய்து கொடுப்போம்.

ஆற்காடு பிரஸ், 27, புது அக்ரஹாரம், விழுப்புரம். (S.I.R.)

☞ எல்லா நண்பர்களின் ஆதரவையும் கோருகிறேம்.

தற்காலத் தமிழ் கவிதை

விமர்சனம்

வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ.

2. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள்

கவிமணி 'தேவி' அவர்களின் கவிதை தனிச் சிறப்புடையது; அதில் அருட் பொலிவு மின்னுகிறது; சொற்களிலும் சொற்றொடர்களிலும் சிருஷ்டி மெருகு தவழ்கிறது; அபூர்வமான சொற் சித்திரங்களாகவே, கவிதை மின்னிப் பிறக்கிறது; கற்பனையின் மணமும் மறுமலர்ச்சியும் பரவிக்கிடக்கின்றன; கவிதையின் தூய வெண்ணிற வடிவம் (Poetic Purity of form) நன்கு அமைந்திருக்கிறது; எளிய இனிய சந்தங்கள் அவருடைய கவிதையை அணி செய்கின்றன; இதயத்துடிப்பும் தெரிகிறது; இயற்கையின் ஜாலமும், சஞ்சலமும், உறுதியும், தெய்வ நிலையும் தெரிகின்றன; அருளோதயமாகப் பிறக்கும் சொற்கள், கலந்து குமுறித் தெளிந்து தேனாறாக ஓடுகின்றன; கலையின் ஜீவன் சிறகடித்துப் பறக்கிறது; சொந்தமாக எழுதிய பாட்டுக்களிலும், ஆங்கிலத்திலிருந்து பெயர்த்த தமிழாக்கக் கவிதையிலும், கலையின் உண்மையும் அழகும் கலந்து வாழ்கின்றன; இவர்கள் பாடியிருப்பது உண்மைக் கவிதை, செயற்கையில் பிறந்த செய்யுள் நடையல்ல. தெய்வம் முதல் துரும்புவரை, இவர்கள் கவிதையில் கற்பனைச் சித்திரங்களாகக் காட்சியளிக்கின்றன.

தூய்மையான கவிதை உருவில், தேவி அவர்கள் பாரதியாரை மிஞ்சிவிட்டார்கள் என்று கூடச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது; ஆனால், சன்னதத்துடிப்பில், பாரதியார் தேவியை மிஞ்சிவிடுகிறார். தேவியின் கவிதை நடை அருவிபோலத் தெளிந்து ஓடுகிறது; பாரதியாரின் காவிய நடை, புயல் வீசுகிறது; அதில் ஒரு தமிழ்மொழிச் சுழற்சியும் இன்பமாய் உதயமாகிறது. பாரதியாரின் கவிதா சிருஷ்டிச் சிறப்பை, தேவி அவர்களே உணர்ந்து "பாரதி பாடலும் பட்டிக்காட்டானும்" என்று இன்பமாய் 88 வரிகளில் ஒரு இன்ப விண்ணிலிருந்து பாடியிருக்கிறார்கள்; இந்தப் பாட்டில், பாரதியாரின் கவிதைத் தேனையே பிழிந்தெடுத்திருக்கிறார்கள். பாரதியாரின் கவிதைக்கே, இந்தப் பாடல் ஒரு இலக்கிய விமர்சனமாகவே வந்துவிட்டது; பாரதியாரின் பாடலில், இசையும் இயற்கைக் கொந்தளிப்பும், குயிலும் கிளியும் கூவும் நிலையும், வெண்ணிலாவின் தூய அகண்ட வெண்மையும், பெண்களின் கற்பு நிலையும் அதன் நிறையும் ஆணையும், தியானமும், செந்தமிழின் அழியா அமுத நிலையும், 'பாப்பா'வின் தேன் மழலையும், பாஞ்சாலி சபத மின்சாரமும், கண்ணன் காதல் ரீங்காரமும், ஏழைகளின் வறுமைத்தீயும், உணர்ச்சியின் உன்னத கோபுரங்களாகவே வெளிவருகின்றன.

தேவியின் 'கருணைக்கடல்', உணர்ச்சிக்கடல்; 'பாரசீகக் கவியமுதம்', 'உமர் கயாமி'ன் தத்துவ விளக்கம்; 'வெண்ணிலா', ஒரு அகண்ட பாலபிஷேகம்; கடல், ஒரு அலையோவியம்; 'புலிக்கூடு', பிளேக் (Blake) கின் மூலத்தை மிஞ்சிய விநோதச் சித்திரம்; 'ஆறு' அல்லும் பகலும் புலம்பி அலைந்து வருகிறது; தாலாட்டின் 'ஆராரோ' ஆகாசத்தையே எட்டிப்பிடிக்கிறது; 'சேவல்' ஒரு இயற்கைக் கடிகாரமாகவே தொண்டாற்றுகிறது; 'அஞ்சலி', தாகூரின் இசைச் சித்திரத்

தையே எதிரொலிக்கிறது; ஒரு பறவையின் சிந்தனை, விண்ணையும் மண்ணையும் இன்பமாய் இணைக்கிறது; 'குருட்டுப்பையன்' என்ற பாடல் ஆங்கில மகா கவி மில்டனை (Milton) நினைவுறுத்துகிறது.

தேவியின் கடல் பாட்டைப் பாடும்போது, சித்தரஞ்சன தாசரின் 'சாகர்—சங்கீத்' என்ற கடற்பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. அலையின் தாண்டவமும், கொந்தளிப்பும், ஆத்ம சாந்தியும் கலந்து பாடும் கடற்பாட்டேயாகும். கடல் உருண்டு திரண்டு உடைந்தோடிவரும் காட்சியும், ஓடத்தை எடுத்தெறியும் காட்சியும், எல்லையறியாப் பெருங்கடலில் உயர்ந்த காவிய லீலைகளாகவே வந்துவிடுகின்றன. ஒரு பாட்டைச் சுவைத்துப் பார்ப்போம். அதில் சொற்களின் ஜீவகளை குதித்து விளையாடுவதைப் பார்த்து இன்புறுங்கள் !

"புலிக் கூடு"

"பந்த மெரியுதோடி—கண்களைப்
பார்க்க நடுங்குதடி
குந்தம்வா ளீட்டியெல்லாம்—கூடவே
கொண்டு திரியுதடி.

வாயைப் பிளக்குதடி—கையுறை
வாளும் உருவுதடி
பேயைப் படைத்தபின்னே—இதனையும்
பிரமன் படைத்தானடி.

வாலை துறுக்குதுபார்—வால்நுனி
வட்டஞ் சுழலுதுபார்
சாலப் பதுங்குதுபார்—நம்மீது
சாடவும் நோக்குதுபார்.

இடித்து முழங்குதடி—தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி
அடுத்து நெருங்காதேடி—அதுமிக
ஆங்காரம் கொள்ளுதடி.

மானைப் படைத்த தெய்வம்—புலியையும்
வளர்த்து விடலாமோடி
தேனைப் பழித்த சொல்வாய்—எனக்கு நீ
தெரிந்துரை செய்வாயோடி."

எவ்வளவு அழகான புலிப்படம் பார்த்தீர்களா ! இந்தப் படமே, நம்மீது பாய்ந்து விடும் என்று அஞ்சுகிறேன்.

இதைப்படித்து இன்புறும்போது, சில ஆங்கில ஆராய்ச்சி மேதைகளின் கருத்துக்கள் வந்து குவிகின்றன; கவிதைச் சித்திரத்தில், மொழி சுடரோவியமாக உதயமாக வேண்டுமென்றும், கவிஞனின் இதய ஒலியைப் பிரதி பலிக்கவேண்டுமென்றும் எ. ஸி. பிராட்லி என்பவர் கூறுகிறார்; பிரெஞ்சு இலக்கிய மேதை ஆண்டிரி ஷெவிரில்லான், ஷேக்ஸ்பியரின் கவிதையைப்பற்றிச் செய்திருக்கும் ஆராய்ச்சியில், ஒரு கவிஞனின் கற்பனை உள்ளத்தில், சன்னதக் கொந்தளிப்பில், உணர்ச்சித் தீயை உமிழும் எரிமலையாகவே அவனுடைய மொழி மாறிவிடுகிறது என்று உறுதி கூறுகிறார். வசனத்தில் கவிதை உமிழும் கார்லைல் (Carlyle), இதே கருத்தைக் கொண்டவர். கலையின் பொலிவை விளக்கும் டி. யஸ். மக்கால் (Maccoll) 278 பக்கங்களில், உண்மைச்சித்திரம் எது என்று ஆழ்ந்த விமர்ஸனம் செய்திருக்கிறார்; கவிஞன் கனவே, கலை.

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ ஆர். ஸ்ரீனிவாசன்



ஸ்த்ரீ எழுத்தாளர்கள்

10

லோகஸேவா பராயணி

ஸ்ரீமதி ருக்மணியம்மாள் பி. ஏ.

பெண் கல்வி முன்னேற்றத்திற்காகவும், ஸ்த்ரீ எழுத்தாளர்கள் முன்னேற்றத்திற்காகவும் பலவிதங்களிலும் பாடுபட்டு உழைத்து வரும் பெயர் பெற்ற உத்தம இந்திய ஸ்த்ரீ ரத்தினங்களில் ஸ்ரீமதி ருக்மணியம்மாள் பி. ஏ. ஒருவர். இம்மாதரசியின் ஜன்ம தேசம் தமிழ்நாடு, இவர் ஜாதியில் ஸ்ரீரங்கத்து ஐய்யங்கார். இம்மாதரசி நமது தென்னிந்தியாவில், அதுவும் மைசூர் சமஸ்தானத்தில் பெண் கல்வி முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்றி ஸ்த்ரீ சமூகத்திற்கே பலவிதத்திலும் சிறந்த உதவிசெய்து வருகிறார். இவரது கல்விச் சிறப்பும், உழைப்பும், மதிப்பும், சத்குணங்களும், சாமர்த்தியமும், எழுத்து வன்மையும், வாக்கு வன்மையும் இந்தியா முழுவதும் புகழ்பெற்றுளது. இவ்வம்மை ஏழைகளின் தாய், மாணவிகளின் குரு, பால்யவிதவைகள், ஏழை அனாதை முதலியோர்களின் உற்ற துணைவி, இந்திய பெண் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைக்கும் பாரதப் புதல்வி.

இக் கல்வி களஞ்சியம் மைசூர் நகரிலிருக்கும் மகாராணி பெண்கள் கல்லூரியில் தலைமை ஆசிரியை பதவியை (Principal) பல வருட காலங்கள் அலங்கரித்து, தற்பொழுது உத்தியோகத்திலிருந்து விலகியவராய் உபகாரச் சம்பளம் பெற்று வருகிறார். இதுகாறும் பொதுசேவை செய்ததுமின்றி, தற்சமயம் தனது சக்திக்குமீறி பொதுசேவை செய்து வருகிறார்.

பிறப்பு

ஸ்ரீமதி ருக்மணியம்மாள் 1877-ம் வருடம் மைசூர் சமஸ்தானத்தின் தலைநகரமாகிய மைசூர் நகரில் பிறந்தார். இவருடைய பிதாவாகிய நங்கபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் மைசூர் மகாராஜாவின் அரண்மனையில் ஓர் சிறு உத்தியோகத்திலிருந்தார்; மிக எளிய குடும்பத்தைச் சார்ந்தவரானாலும் மிகவும் கண்ணியமான புருஷர். அவருக்கு எட்டு குழந்தைகள். நிறைந்த குடும்பத்தில் பிறந்த ருக்மணியம்மாள் குழந்தைப் பருவத்திலிருந்தே வெகு சுறுசுறுப்பாகவும், தீக்ஷண்யபுத்தியுடனும், கல்வி பிரியமுடையவராகவும் விளங்கினார். குழந்தையின் புத்திசாலித்தனத்தை கண்டு அன்னையும் பிதாவும் அளவுகடந்த ஆனந்தத்துடன் சிறுமியின் இஷ்டப்படியே படிப்பு சொல்லிக்கொடுத்து, நாளடைவில் பள்ளிக்கூடத்திலும் சேர்த்தார்கள்.

கல்வி

குழந்தைப் பருவத்திலிருந்தே வித்யாபிரியை ருக்மணியம்மாள், மைசூர் சமஸ்தானத்தில் ஸ்த்ரீகளிலேயே இவ்வம்மைதான் முதன்முதல் பி. ஏ. பட்டம் பெற்றவரென்ற புகழுடன் 1905-ம் வருடம் பி. ஏ. பரீக்ஷையில் தேறினார்.

கலியாணமும் புத்ரலாபமும், வைதவ்யமும்

ஸ்ரீமதி ருக்மணியம்மாளுக்கு தனது பதினேறும் பிராயத்திலேயே விவாகமும் நடந்தேறியது. இவ்வம்மைக்கு இருப்பது ஒரே ஒரு பெண்தான். இவரது கணவர் 1917-ம் வருடத்திலேயே மரணமடைந்தார். இவ்வம்மை பெண்ணேயும் தானே படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவந்தார். "நூலைப்போல சேலே, தாயைப்போல பிள்ளை" என்பதுபோல் இவ்வுத்தமியின் புதல்வி ஸ்ரீமதி ஏ. டி. லக்ஷ்மம்மாள் எம். ஏ., எல்.டியும் தாயைப்போலவே, பூர்ண கல்வியுடன் விளங்கியவாறு, மைசூர் சமஸ்தான சர்க்காரிலேயே ஹைஸ்கூல் ஹெட்மிஸ்ட்ரஸ்ஸாக, தும்கூரிலிருக்கிறுர்; அல்லாமல் பொதுஜனத் தொண்டிலும் ஈடுபட்டு வருகிறுர்.

உத்தியோகம்

லோகசேவா பராயணி ஸ்ரீமதி ருக்மணியம்மாள் 1903-ம் வருடம் மைசூர் சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்தார். இவ்வம்மை,தான் உத்தியோகம் பார்த்துவந்த பெண்கள் கலாசாலையிலும், தென்னிந்திய பெண்மணிகளுக்கும் எழுத்து மூலமும், வாக்கு மூலமும், தனத்தின் மூலமும் அளவுகடந்த தொண்டாற்றியுமிருக்கிறுர், தொண்டாற்றிக்கொண்டுமிருக்கிறுர். மைசூர் மகாராணி கல்லூரியில் (Lecturer) ராக சேர்ந்த இவ்வம்மை நாளடைவில் அதே கல்லூரியில் (Principal) பதவியும் வகித்து 1932-ல் உத்தியோகத்திலிருந்து விலகினுலும்கூட தற்பொழுதும் கலாசாலையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருகிறுர்.

பொது சேவை

(All India Women's Conference) அகில இந்திய மாதர் மகாநாட்டின் அங்கத்தினராகவும், இதன் மைசூர் கிளையின் காரியதரிசியாகவும் இருந்துவருகிறுர். மேலும், தானே மைசூர் நகரமாதர்களின் உபயோகார்த்தமாக 1918-ல் மைசூர் நகரில் ஓர் மஹிளாசமாஜத்தையும் ஸ்தாபித்து, தானே தலைமைவகித்து அச்சங்கத்தை மிக சிறப்பாக நடத்தியும் வருகிறுர். இந்த சமாஜத்தில் ஆயிரக்கணக்கான அங்கத்தினர்களுண்டு, இவ்வம்மை கிராமப் புனருத்தாரணம், சிசுசம்ரக்ஷணை முதலிய காரியங்களிலும் ஈடுபட்டுவருகிறுர். சர்க்கார் பெண்பாடசாலைகள் இல்லாத இடங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறுர். கிராமப் பெண்களிடத்தில், பெண் குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்புதல், சிசுசம்ரக்ஷணை; வீடுவாயில்களையும், குழந்தை குட்டிகளையும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுதல் முதலிய உபயோககரமான விஷயங்களை தெளிவாகப் போதித்து, அவர்களது வேண்டுகோள்களைச் செவிகொடுத்துக் கேட்டு, உதவிசெய்து கிராமப் பெண்களின் அன்பிற்குப் பாத்திரமாகி இருக்கிறுர்.

இவ்வம்மை தனது முதிர்ந்தவயதிலும்கூட சுமார் இருபது வயது நங்கைக்கிருக்கும் ஊக்கத்துடனும், பலத்துடனும் பொதுநல சேவையிலீடுபட்டு, ச்ரமத்தைக் கவனியாது தொண்டாற்றிவருவது வெகு ஆச்சரியமே.

மைசூர் தேச, ஏன்? தென்னிந்தியாவின், பெண்டிர் திலகமான இவ்வம்மை 1920-ம் வருடத்திலிருந்து மைசூர் சம்ஸ்தான செனெட் மெம்பராகவிருந்து வருகிறுர். சென்ற ஆறுவருட காலமாக மைசூர் ஜில்லாபோர்ட் மெம்பராகவும், மைசூர் சம்ஸ்தான சட்டசபையின் அங்கத்தினராகவும் இருந்துவருகிறுர். இவ்வம்மையின் எழுத்து வன்மையையும் வாக்குவன்மையையும், பொதுநல ஊழியத்தில் இவருக்குள்ள ஊக்கத்தையும், கண்டு வியந்தவராய் மைசூர் மகாராஜாவானவர் மூன்று வருடங்களுக்குமுன் "லோகசேவா பராயணி" என்ற கௌரவப்பட்டத்துடன், கில்லத்துகளையும் இவ்வம்மைக்கு வழங்கி கௌரவித்துள்ளார். இவ்வம்மை மேடைமீது ஏறிப் பிரசங்கம் செய்யவாரம்பித்துவிட்டால், தேன்மாரி பொழிந்தாற்போல்தான் இருக்கும். தாய், பெண் இருவரும் நீடூழி காலம் வாழ்ந்து பேரும் புகழும் அடைந்து, தென்னிந்தியப் பெண்மணிகளுக்கே பூஷணமாக விளங்கட்டுமென்று அம்பிகையைத் துதிக்கிறேன்.

அடுத்த வினடியே தனக்குத் தகப்பனர் ஸ்தானத்திலிருந்து, இத்தனைநாளாக உபகாரம் செய்துவரும் பெரியவருக்குத் தன்னைப்பற்றிய எந்த விஷயமும் தெரியாதிருக்கையில் இங்கு ஏதாவது ஒருவிதமான ரஸாபாஸமாக முடிந்தால் அது அவருக்குத் தெரிந்தால், உண்மை யறியாத அவர் மனம் "ஐயோ! இத் தகைய ஊழல் ஆத்மாவுக்கா நான் உதவி செய்தேன்?" என்று நொந்துகொள்ள இடமுண்டாகும். இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வது? என்று துடித்தாள்.

வேலைக்காரனுக்கு இவளுடைய நிலையைக் கண்டு ஒன்றும் புரியாது போகவே, "ஏம்மா! பெரியம்மாளே பாக்கணுமா! உள்ளே வாங்களேன்... இல்லாட்டிபோனு, நீங்க யாருன்னு சொன்னு நானு உள்ளேபோய் சொல்றேன்." என்ருன். அப்போதுதான் தன்னுடைய தடுமாற்றமும் மவுனமும் வேலைக்கார னுக்குச் சந்தேகத்தைக் கொடுத்துவிட்டதென்று தெரிந்தது. பிறகு சற்று சமாளித்துக்கொண்டு "நான் உள்ளே வரவில்லையப்பா! சின்னய்யாவின் ரெண் டாவது சம்ஸாரத்துக்கு நான் உறவு. அந்தம்மாள் இங்கிருக்கிருர்களோ என்று எண்ணிவந்தேன்! நான் போகிறேன்" என்று சமாதானம் கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டாள்.

முன்னிலும் ஆயிரம் மடங்காக வேதனையும் சங்கடமும் பெருகியதேயன்றிக் குறையவில்லை. 'இவ்வளவு தூரம் வந்துவிட்டு அந்தப் படுபாவியைப் பார்க்கா மலா போவது என்று ஒருபுறம் பலமாக வாதாடுகிறது. மான அவமானமெல் லாம் காற்றில்விட்டு, ஏகாங்கிக் கட்டையாக என்னைச் சந்தியில் விட்டபின்னர் எதற்கு அஞ்சவேண்டும்?...'தலைக்கு மிஞ்சிய விபத்தில்லை. கோவணத்திற்கு மிஞ் சிய தரித்திரமில்லை' என்கிற பழமொழிப்படி என்கதியாகிவிட்டது.இனி எனக்கு வேண்டுவது ஒரு மஞ்சள் கிழங்கும் குங்குமமும், அதோடு மரண தேவதையின் அழைப்புந்தான் தேவை. இத்தகைய நிலைமையிலிருப்பவளுக்கா லஜ்ஜை, மானம்? சீச்சீ! க்ருபாவதீ! நீ என்றைக்கோ செத்துவிட்டாய். மகமாயியிடம் அடைக்கலம் புகுந்து ஐக்யமாகிவிட்டாய்...இவள் லக்ஷ்மீபாயல்லவா! அவளுக் கும் காலம் நெருங்கிவிட்டது. ஏன் நான் பயந்து சாகவேண்டும்? ராஜபாட்டை யாக நேரே உள்ளேபோய் நிற்கிறேன். என்னதான் செய்கிருர்களோ, பார்க்க லாம்' என்ற துணிவு பலமாக எழுந்ததால் மறுபடியும் பங்களாவுக்குள்சென்ருள்.

அந்த வேலைக்காரன் சாப்பாட்டிற்குப் போய்விட்டதால் வழிமறித்தான் சாமி யாருமில்லை. தடதடவென்று உள்ளே சென்று முதலில் தன் மாமனர் படத் தையும் கணவனின் படத்தையும் வணங்கிக் கண்குளிரக் கண்டு களித்தபிறகு மாமியார் எப்போதும் உட்கார்ந்து ஊஞ்சலாடும் இடத்திற்குப் போனாள்.

ஆனல் கர்வம் ஆடிப்பாடி சற்று ஓய்ந்திருப்பதுபோல் கிழவி ஊஞ்சலாடி ஓய்ந்துவிட்டவள்போல் தனியாக ஒரு பலகையின்மீது நீட்டிக்கிடந்தாள். கிருபா வதி வெகு தைரியத்துடன் எதிரே சென்று "மாமீ! சௌக்யமா!" என்ருள்.

இக் குரலைக் கேட்டுத் தீயை மிதித்தவள்போல் நடுநடுங்கிய பார்வதியம்மாள் "யாரு! க்ருபாவதியா... ஆ... கிருபாவதியா!" என்று அலறியவாறு எழுந்து உட்கார்ந்தாள். கிருபாவதி சற்றும் பயப்படாத தைரியத்துடன், "ஆம்... கிருபா வதிதான். அதுகூட தெரியவில்லையா...மகமாயியின் ப்ரஸாதம் பெற்ற க்ருபா வதிதான். நான் கொடுத்த வாக்கின்படி நடத்திவிட்டேன். இன்னும் அதிகமாகவே உங்களிடம் என் கண்மணியைக் காரணார்த்தமாக வளரவிட்டேன். நீங்கள் கொடுத்த வாக்குப்படிக்கு என் செல்வத்தை என்னிடம் சேர்த்துவிடுங்கள். இனி நான் பிரிந்திருக்கமுடியாது. எங்கே என் ப்ரேமாமணி!" என்று சற்று அதிகார த்வனியிலேயே கேட்டாள்.

இதைக்கேட்ட பார்வதியின் நாக்கு உண்மையிலேயே முதலில் குழறிற்று. "ஐயையோ...ப்ரேமாமணியா! என் செல்வ ராஜாத்தியா! அதைத்தான் என் னிடமிருந்து பிடுங்கிக்கொண்டு போய்விட்டானே! என்னடியம்மா செய்வேன். நான் கட்டிய மனக்கோட்டைகள் ஒன்றிரண்டில்லை. எல்லாம் இடிந்துபோய்

விட்டதே... அந்தனைக்கும் ஆதி காரணம் அந்தச் சண்டாளப் பாவி நாகராஜன்தான் நம்ம குடிக்குக் கோடாலிக்காம்பாக வந்தான்...

இந்த கொடூர வார்த்தையைக் கேட்க மனந்தாளாத கிருபாவதி, "என்ன ! நாகராஜன்மீது பழியா... போதும்; போதும்... ஆதியில் அவரைக் கலக்கியது போதாதென்று அந்திமத்திலும் விடவில்லையா ! அந்த புண்ணிய தம்பதிகள் சௌக்யமாயிருக்கிறார்களா ! அவர்களைப் பார்த்தே எத்தனையோ யுகமாகி விட்டது. என்ன காரணத்தினால் அவர்களைப் பழித்தும் இழித்தும் கூறவேண்டும்?

பார்வதியம்மாள் இடைமறுத்து, "ஐயையோ ! அடி அப்பாவிப் பெண்ணே! அந்த கிராதகனை நீ பார்க்கவேயில்லையா ! அதான் உனக்கு விஷயம் ஒன்றுமே தெரியவில்லை. சரிதான் போ ! உன்னை இக்கதிக்கு ஆளாக்கியதற்குக் காரணமே அந்தப் படுபாவிதான் என்பதை நான் பிறகல்லவா அறிந்தேன். முரளிக்கு இல்லாத பொல்லாத போதனைகளைச் செய்து நீ அழகற்றக் கட்டையாகிவிட்டதால் 'இனி அவளைத் தள்ளிவிடு. வேறு அழகான பெண்ணை நான் விவாகம் செய்து வைக்கிறேன்' என்று தொணப்பிப் பல பெண்களைக் காட்டி மனத்தையே மாற்றி, மகமாயிக்கும் பயப்படாதவிதம் செய்து கல்யாணத்தையும் செய்துவிட்டான். ஏண்டியம்மா ! என் ஒரே மகனின் மனத்தை அந்தப் பாவி கலைத்து குட்டிச் சுவராடித்ததைத் தெரியாமல் மகனுடைய மனது தானாக மாறிவிட்டதாக்கும் என்று எண்ணி கல்யாணத்திற்குமட்டும் நானுந்தான் ஒப்புக்கொண்டேன். அந்தப் பாவி அம்மட்டுமா செய்தான். நீ யாரையோ சினிமாக்காரனையோ, ரேடியோக்காரனையோ இழுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக முரளிக்குப் பின்னும் தூபம் போட்டு அவன் மனத்தை அடியோடு கத்தரித்துவிட்டான்.

குழந்தை என்னிடமிருந்தால் நீ வந்து வாங்கிக்கொண்டுபோய்விடுவாய் என்றும், தாயின் விபசாரகுணம் குழந்தைக்கும் பழகிவிடும் என்றும் என்னென்னவோ கலகங்களைச் செய்து அதையும் பிடுங்கிக்கொண்டு போய்விட்டாண்டியம்மா ! குழந்தை என்னிடமிருந்தால் இத்தனை நாள் நான் உன்னிடம் கொடுக்காமலிருப்பேனா ! உன் மாமாவும் ஓடிவிட்டாராம். அதுவும் எனக்குத் தெரியாது. இந்த நாகராஜன் கம்மனாட்டி அவன் நாசமாப்போக. உனக்கு இத்தனை த்ரோகம் செய்துவிட்டதனால்தான் உன் முகத்தில் விழிக்காமலிருக்கிறான். அதிலிருந்தே தெரியவில்லையா !

ஏதோ போதாக்காலத்திற்குத்தான் உனக்கும் கச்சேரி செய்யவும் ரேடியோவில் பாடவும் புத்தி வந்தது. அதைக்கண்ட முரளி நாகராஜன் கூறியதை அப்படியே நம்பிவிட்டான். அவனுடைய அந்தஸ்திற்கும் இந்த அவமானத்திற்கும் தாளாது வேலையை சுந்தரபுரிக்கு மாற்றிக்கொண்டு போய்விட்டானாம். என்ன சாபக்கேடோ ! குடித்தனம் சிதறி சீர்குலைந்துவிட்டது.

"அப்பா ! அவள் அப்படிப்பட்ட பெண்ணல்லடா ! மூர்க்கமாக அவளைப் பழிக்காதேடா !" என்று நான் முட்டிக்கொண்டேன். அவன் மனது முறிந்துவிட்டது... என்று கூறிக்கொண்டே வருவதைக் கேட்டு க்ருபாவதிக்கு அங்கிருக்கவே முடியவில்லை. மனது தத்தளித்துச் சித்திரவதை செய்கிறது. உடனே வெகு ஆத்திரத்துடன் மாமியாரை நோக்கி...

"எனது வெளியழகுதான் குறைந்ததேயன்றி எனக்கு பகவான் கொடுத்துள்ள அறிவும், உள்ளழகும், வெளுத்த இதயத்தின் சோபையும் குறையவே இல்லை... அதை பகவானுக்குச் சரியானபடி காட்டினால்போதும்... மனிதர்களை மனிதர்கள் ஏமாற்றிவிடலாம். குடியைக் கெடுக்கலாம். அத பாதாளத்தில் தள்ளிப் புதைக்கலாம். கையும் மனமும் துணிந்து கொலையும் செய்யலாம்... ஆனால்... ஆனால்... அதோ ! மேலே எப்போதும் ஒவ்வொரு அணுமுதல் ப்ரம்மாண்டமலை வரையிலுள்ள சகல ஜீவராசிகளையும் இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருக்கிறானே அவனை, அந்த பரமாத்மாவை, ஒருவராலும் ஏய்த்துவிடமுடியாது. மோசம் செய்யமுடியாது. கண்ணில் மண்ணைத் தூவமுடியாது. அவனது சத்யம்

அழியாதது. அதற்கு என்றும் அபார சக்தியுண்டு. அதுதான் ஜெயிக்கும். க்ரோதம் கொலேயுண்டு சாகும் என்பது நினைவிருக்கட்டும்.

மாமீ! என்னை என்னவோ முற்றிலும் கெடுத்துக் கொலை செய்தாகி விட்டது. இனி எனக்கு வேண்டியது இந்த நிலைமையுடன் சாவு ஒன்றுதான். அதைக்கூட உங்களால் அளிக்கமுடிந்திருந்தால் மனப்பூர்வமாகக் கொடுத்திருப் பீர்கள். எதனாலோ அந்த துணிவுமட்டும் வரவில்லை. ஆண்டவன் உங்கள் எல் லோருக்கும் கூலி கொடுப்பான். கடவுள் ஒருவன் இருக்கிறான் என்பதை இது வரையில்தான் மறந்திருந்தீர்கள். இனியும் அப்படி மறந்து கடைசிகாலத்திலும் ஏமாந்துவிடாதீர்கள். ரத்தத்திமிர் குறைந்துவிட்டது. ரக்ஷகன் ஒருவன் இருப் பதை நினைத்துச் சாவைக் கோருங்கள்'' என்று வெகு தைரியமாயும் ஆணி அறைவதுபோலும் துக்கமும் ஆத்திரமும் த்வனிக்கக் கூறிவிட்டு சடக்கென்று வெளியே சென்றாள்.

பார்வதியம்மாளின் தலைமீது வானமே இடிந்து விழுந்துவிட்டது போன்ற உணர்ச்சி உண்டாகி அப்படியே பலகைமீது சாய்ந்தாள். அவளுடைய நிலை மையை அப்போது யாராவது பார்த்திருந்தால், "உயிரிருக்கிறதா! இல்லையா!" என்கிற சந்தேகமே அதிகமாகத் தோன்றும். அப்படித் துவண்டுபோய்க்கிடந்த அவள் சரீரத்திலிருந்து வெயர்வைமட்டும் பொங்கி வழிந்துகொண்டிருந்தது,

47

ஐயோ பாவம்! நாகராஜனுக்கு வந்த காய்ச்சல் சாமானியமானதாக இல்லாது டைபாயிடாகிவிட்டதையறிந்த கண்ணம்மாளுக்கு உள்ளம் பதறு கிறது. 'ஏழைகுடும்பம்; ராஜவைத்தியம்' என்பதுபோல் நாகராஜனுக்கு வரவுக் கும் செலவுக்கும் திட்டமாகிவிடுவதால் இத்தகைய பலமான வ்யாதிக்கு எப் படித்தான் பெரிய டாக்டரை அழைத்துப் பார்க்கமுடியும்?

கண்ணம்மாளின் தகப்பனாரும் இங்கு சகாயத்திற்கு வந்து ஏராளமாகப் பணத்தைச் செலவிட்டு வைத்தியம் செய்தார். ஆஸ்பத்திரியில்தான் கொண்டு விடவேண்டுமென்கிற நிலைமைக்குவந்ததும் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவிட்டார்கள். நாகராஜனுடைய ரிஜிஸ்தர் கடிதமும் முரளியால் திருப்பப்பட்டதையறிந்து அவன் மனது அடியோடு முறிந்துவிட்டது. தன் சினேகிதனின் மனைவிக்காக இத்தகைய பாடுபட்டேன்தான் என்பதை தனது மாமனாரறிந்தால் ஏதாவது வித்யாஸமாக நினைத்துவிடப்போகிறாரே என்கிற யோசனையினால் கண்ணம் மாவையும் இதுபற்றி சொல்லவேண்டாம் என்று எச்சரித்துவிட்டான்.

மாமனார் இல்லாத சமயமாகப் பார்த்து கண்ணம்மாளிடம் ஏதாவது தகவல் தெரிந்ததா! என்று விசாரிப்பான். ஒன்றுமில்லை என்பதைக் கேட்டு உள்ளம் உருகுவான். நோய் பலப்பட்டு நினைவு தப்பியுள்ள சமயத்திலும், "ஐயோ! கானே உன்னை சதிசெய்ததுபோலாகிவிட்டதே. என்னசெய்வேன்?' என்று பிதற்றுவான்.

தன்னை வந்து பார்க்கக்கூட முரளிக்குக் கசப்பாகிவிட்டதே என்று நினைக்கும்போது அவன் இதயம் வெடித்துவிடும்போல் வேதனை செய்யும். நாக ராஜன் அந்தரங்கம் முற்றும் கண்ணம்மாவுக்குத் தெரியுமாதலால் முரளியை யாவது, கிருபாவதியையாவது பார்த்தால்தான் தன் கணவனுக்கு உடம்பு குணமாகுமென்று திட்டமாகத் தோன்றிவிட்டதால் தன் தமயனைத் துணைக்கு அழைத்துக்கொண்டு முரளியை நேரில்போய் பார்த்து சகல விஷயங்களையும் கூறிவிடுவது என்று முடிவு கட்டிக்கொண்டாள்.

இதற்கிடையில் அடிக்கடி ரேடியோவில் கிருபாவதியின் குரல்போல் யாரோ பாடுகிறார்கள் என்பதை யறிந்து நிலயங்களுக்குக் கடிதமெழுதி விசாரித் ததில் கிருபாவதி என்கிற பெயருடைய யாருமே இங்கில்லை என்று பதில் கிடைத்துவிட்டது. நாகராஜனை அவன் தாய் தந்தையர்கள் கவனித்துக்கொள் ளச் செய்துவிட்டு முன்பு யோசித்தபடியே நேரே வெகு தைரியமாகக் கிளம்பி முரளியின் விலாசத்தை விசாரித்தறிந்துகொண்டு அங்கு சென்றாள்.

முன்போல் ஓட்டலில் இல்லாது இப்போது குடித்தனப் பாங்காக வீட்டிலேயே இருப்பதால் கண்ணம்மாள் சற்றும் பயமின்றி நேரே ஆபீஸ் ரூமுக்குப்போய் "நமஸ்காரம்"...என்றாள்.

கிருபாவதியைப் போலவே உருவம் மாறி அடையாளமே தெரியாதிருக்கும் கண்ணம்மாளை முதலில் முரளி முற்றிலும் அன்னிய மனுஷியாகவே நினைத்து "யாரம்மா! எங்கே வந்தீர்கள்!" என்றான்.

கண்:—இங்குதான். தங்களிடம்தான் வந்தேன். 'யாரம்மா!' என்று கேட்கும் படியான காலமாகவிருப்பதால்தான் அவரை நேரில் வந்தாலும் விரட்டிவிட்டீர்கள். நான் தெரியவில்லையா! நான் கண்ணம்மாளல்லவா!

முரளியைத் தூக்கி வாரிப்போட்டது. "கண்ணம்மாவா !...நாகராஜனின் மனைவியா...ஐயையோ! உனக்கும் மகமாயி விளையாடினாளா! நீயா நாகராஜன் மனைவி...அடாடா...உன்னைத் தள்ளிவிட்டு அவளை இழுத்துக்கொண்டு ஓடிவிட்ட ரகஸியத்தை என்னிடம் முறையிடவந்தாயா! அல்லது, எனக்கு இந்த விபரீதம் தெரியாது; சொல்லவேண்டும் என்று வந்தாயா? சகலமும் எனக்குத் தெரியும்...உத்தம நண்பனே கிராதக த்ரோகி...என்பது எனக்குத் தெரியும்."

என்று பயித்தியக்காரன்போல் அவன் சொல்லிக்கொண்டு போவதைக் கேட்ட கண்ணம்மாளுக்கு ஒன்றுமே தோன்றாது திக்ப்ரமை பிடித்ததுபோலாயிற்றெனினும் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு "என்ன!...தாங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லையே ! யார் த்ரோகி...யாரை யார் இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்? என்ன சமாச்சாரம்?விளங்கக் கூறுங்கள். நானும் க்ருபாவதியைப்போல் உருவம் மாறியிருப்பினும் அறிவுகூட மாறிவிடவில்லை.விஷயத்தை விளங்கக் கூறுங்கள்" என்று வெகு தைரியமாகக்கேட்டாள்.

இதுகேட்ட முரளி முதலில் சற்று அசந்துவிட்டான். "கண்ணம்மா! முதலில் உன்னை உட்காரச்சொல்லவே மறந்துவிட்டேனே. இப்படி உட்காரு. நீ உன் தாயார் வீட்டிலிருந்து வருகிறாய் என்று நினைக்கிறேன். அதனால்தான் உனக்கு ஒன்றுமே விஷயம் தெரியவில்லை. உன் கணவனை நான் எனது உயிருக்குயிராக நினைத்திருந்ததுதான் உனக்குத் தெரியுமே! அவன் எனக்குச் செய்துள்ள த்ரோகத்தின் அளவைச் சொல்லமுடியாது...என் மனைவியை துராக்ருதமாக இழுத்துக்கொண்டு...கண்ணம்மாளுக்கு அதற்குமேல் தாங்கமுடியவில்லை. முரளியின் மனத்தில் ஊறிக்கிடக்கும் விஷயத்தைத் தெரிந்துகொண்டாள். காளிகா தேவி போல் உக்ரகம் பீறிக் கொண்டுவந்து, "சட் வாயை மூடுங்கள். நீங்கள் செல்வந்தரானால்...பட்டதாரியானால்...பெரிய உத்யோகஸ்தரானால், அது உங்கள் வரையில் இருக்கட்டும். என் கணவரின் காலில் ஒட்டிய தூசிகூட நீங்கள் நினைத்துள்ளபடி சண்டாள எண்ணத்தை எண்ணாது என்பதை மறக்கவேண்டாம். எந்த குடிகெடுக்கும் நாயி உங்களுக்கு இம்மாதிரியான அக்ரம போதனையைச் செய்தது? அவ்விதம் சொல்லியவர்களின் நாக்கு அழுகிப் புழுத்துத்தான் போய்விடும்...

நண்பரே! இதுபரியந்தம் உம்மெதிரில் நின்று பேசியறியாத நான் இன்று எதற்குவந்தேன் தெரியுமா! என் ப்ராணநாதரின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அவருடைய ஆத்மா தங்களையே நாடித் துடிக்கின்றது. அவர் ஒருமுறையாவது உங்களைப் பார்த்தால் அவர் நோய் குணமாகும் என்கிற பெரும் நம்பிக்கையால் நான் இங்கு துணிந்துவந்தேன். அக்கினி சாக்ஷியாகக் கட்டிய மனைவியை தெய்வ குற்றத்திற்கும் அஞ்சாது துரத்தியடித்த மகா உத்தமராகிய உம்மைப்போல் என் பர்த்தாவையும் எண்ணிவிட்டீர்களா! அத்தகைய த்ரோக எண்ணத்தை இந்த நிமிடமே விட்டாழியும். உங்கள் தகப்பனார் பாவம். அன்னியர் வீட்டிலிருந்துகொண்டுவந்த ஏழைப் பெண் என்று க்ருபாவதியை நினைக்காமல், தான் பெத்த பெண்ணைப்போல் ஆத்மார்த்தகமாக நேசித்து அந்த உத்தமியைத் தேடிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தபிறகே தாங்கள், மகமாயிக்கும் பயப்படாது அந்த மகா பதிவ்ருதாசிரோன்மணியை நடுத்தெருவில் கைவிட்ட

பரிதாபத்தை நானும் என் கணவரும் அறிந்து நெருப்பிடை புழுகெனத் துடித்தோம். உடனே என் கணவர் உங்களை பேட்டி காண ஓடிவந்தார். இதோ, அவரை பார்க்கமுடியாதென்று உங்கள் அருமை பத்தினி எழுதிய சீட்டும், அவள் அண்ணன் எழுதிய சீட்டும், உங்களுக்கு அவர் எழுதிய ரிஜிஸ்டர் கடிதம் திருப்பப்பட்டதும் சாக்ஷி சொல்லுகின்றன'' என்று அந்த சீட்டுகளை முரளியின் முகத்தில் வீசி எறிவதுபோல் எறிந்தாள்.

முரளியைப் பார்க்க வேண்டுமென்று நாகராஜன் எழுதிய சீட்டிலேயே முன்பு பேபியும், சுந்துவும் எழுதியிருந்ததால் அதைப் பார்த்ததும் முரளிக்குத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன...என்னைப் பார்க்கவந்தாளு?... எனக்கு உடம்பா...ஒன்றுமே நடக்கவில்லையே... இதென்ன புதுமை!'' என்று தம்பித்தான்.

கண்ணம்மாள் தான் எடுத்த வார்த்தையை நிறுத்தாது "நடந்ததோ! நடக்கவில்லையோ! எனக்குத் தெரியாது. அவர் வந்ததற்கும் தங்களைப் பார்க்கமுடியாது தடுத்ததற்கும் இதுவே சாக்ஷி போதும். அவர் மனமுடைந்துபோய் அன்றே திரும்பி வந்து என்னை என் பிறந்த வீட்டில் விட்டுவிட்டு மகா புனிதவதியான க்ருபாவதியை ஊர்ஊராய், தெருத்தெருவாய், ஒவ்வொரு பிச்சைக்காரர்களின் கூட்டம் முதல் சகல பயித்தியக்கார ஆஸ்பத்திரிவரையில் ஏறி இறங்கித் தேடித் தேடி பட்டினியும் பசியும் தூக்க விழிப்புமாக அலைந்ததன் பலன் அவர் கடுமையான நோய்வாய்ப்பட்டு டைபாயிடு ஜுரத்தினால் தற்சமயம் உயிருக்குமன்றாடிக் கொண்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறார். குணமென்பதே இல்லை. உங்களையும் அந்த உத்தமியையும் பற்றியே வாய் பிதற்றுகிறார். விஷயங்களை நேரில் கூறி உங்களை அழைத்துப் போகவே நான் இப்போது வந்தேன். அன்று என் வீட்டி விருந்துபோன உங்கள் தகப்பனாரையும் காணவில்லை. தயவுசெய்து என்னோடு வந்து என் அன்பருக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும். கிருபாவதியின் கதி என்ன வாயிற்றோ! தெரியவில்லை. ரேடியோவில் அவர்களின் குரல்போல் சில தினம் கேட்டது. அங்கும் விசாரித்துவிட்டேன். கிருபாவதி என்கிற பெயரில் யாருமே இல்லை என்றும் ஸ்ரீமதி லக்ஷ்மீபாய் என்பவர் ரேடியோ நிலயத்து உத்யோகஸ்தருடைய சொந்தக்காரம்மாள் என்றும் கிடைத்துவிட்டது.

மனிதரைப்போல் மனிதரும் குரலைப்போல் குரலும் இருப்பது சகஜந்தானே என்று நாங்களே தேறினோம்...நண்பரே...தயவுசெய்து உடனே கூட வரவேண்டும். என்ன யோசிக்கின்றீர்கள் என் மனத்துடிப்பைத் தாங்கள் அறியவில்லையா! நண்பரே!...நண்பரே! இந்த ஒரு வழியில்தான் எனக்கு விமோசனம் உண்டாகும் என்று நான் துடியாய்த் துடித்து உங்களை நம்பி ஓடிவந்தேன். என் மனத்தைச் சோதிக்கவேண்டாம்.

"ஆடவர்களுக்கானால் ஒரு மனைவி உயிரோடிருக்கையிலேயே அக்ரமமாக... அநியாயமாக...பல பெண்களை மணந்தும், ரகஸியமாக தொடர்பு கொண்டும், மானங்கெட்டு வாழலாம்...இந்த உதவாக்கரை சாஸ்திரத்தை எந்த மகானுபாவன் எழுதிவைத்தானோ தெரியவில்லை. பெண்களின் கதி அத்தகைய அவலமானதல்லவென்பதையும், அக்கினி சாக்ஷியாகக் கைப்பிடித்த கணவன், மதியில்லாதமண்டுவாயினும் அரிய நிதியினும் மேலான பதி அவன்தான்'' என்கிற உயர்ந்த தர்மத்தைக் கைகொண்டு வாழும் உத்தம வாழ்வு வாழ்கிறவர்கள் என்பதையும் நீங்கள் அறியமாட்டீர்களா!

உலகத்திலுள்ள கிராதக நெஞ்சமுடைய சில ஆடவர்களைப்போல் என் ப்ராணநாதர் என்னை நடத்தாமல் தன்னுயிருக்கும் மேலான பொருளாகவே அன்றும்...நான் நல்ல அழகுடன் வாழ்ந்தநாளிலும் நேசித்தார். இன்னும், மகமாயி விளையாடியதனால் இதோ என் கண்ணில் பூப்பட்டிருந்தது. அக் காலையிலும் முன்னிலும் ஆயிரம் மடங்கு அதிகரித்த ப்ரேமையுடன், பச்சாத்தாபத்துடன், கனிகரத்துடன் என்னை நேசித்ததோடு அம்மன்கோயிலுக்கு அழைத்துச்சென்று

சேவை செய்யச்செய்து தானும் மகமாயியை உள்ளம் உருக ப்ரார்த்தனை செய்ததன் பலன் என் கண்ணில் பூவும் கரைந்துபோய்விட்டது.

என்னை இப்போது அவர் எப்படித்தான் நடத்துகிறார் என்பதை விவரித்துக் கூற உபமானமே எதுவும் அகப்படவில்லை. அத்தகைய ப்ராணபதியின் உயிர்ப் பிச்சைக்கு உங்களை வேண்டிவந்திருக்கிறேன். என்மீது கிருபை செய்து சற்று உடனே வாருங்கள்...எனக்கு பதி பிக்ஷையைத் தாருங்கள்...வாழ்க்கையின் விளக்கை ஏற்றி இன்ப ஒளியைக் கொடுங்கள்'' என்று வெகு ஆவேசத்துடன் அவன் மண்டைமீதே செம்மட்டியால் அடிப்பதுபோன்றும் வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோலும் கூறிக் கண்ணீர்விட்டுக் கதறினாள்.

முரளியின் நிலைமையை வர்ணிக்கவேமுடியாது உண்மையில் பயித்தியம் தான் பிடித்துவிட்டதோ என்று நினைக்கலாம். நாகராஜன் கடிதங்களும் பேபியின் கண்டிப்பான பதில் கடிதமும் அவன் கண்முன்பு நின்று அவனுடைய ஆத்திரத் தீயைக் கிளப்பிவிட்டு அவனை நிலை கலங்கச்செய்தன. இத்தகைய கடிதங்கள் வந்ததாகவே தன்னிடம் இதுகாறும் தெரிவிக்காதிருந்த ஆத்திரம் தலைக்குமேல் பொங்கி எழுந்தது.

கண்ணம்மாளின் சுடுசரம் போன்ற வார்த்தைகள் ஒருபுறம் ஈட்டியால் குத்துவதுபோல் குத்துகின்றன. கிருபாவதியின்மீது தன் தாயார் சொல்லியது அனைத்தும் வெறும் கட்டுக்கதையா! கிருபாவதிக்குப் பயித்தியமும் இல்லை என்றால்... நாகராஜனும் பார்க்கவில்லை என்றால் அவள் கதி என்னவாயிருக்கும்? ரேடியோவில் பாடியது யாராக இருக்கும்? தன் தாயார் இத்தனை பெரிய அபாண்டத்தை எப்படித்தான் மனந்துணிந்து சொல்லி இருப்பாள்? பேபி எதற்காக என்னைப் பார்க்கமுடியாதென்று சொல்லியிருக்கவேண்டும். கடிதத்தைக்கூட ஏன் திருப்பியனுப்பவேண்டும்? ஒன்றை விட ஒன்று என்ன பயங்கரமாயும் மர்மமாயுமிருக்கிறதே... இதென்ன காலக்கொடுமையா!'' என்கிற எண்ணங்கள் அவன் மனத்தில் பெரும் புயல்காற்றுப்போல் சுழற்றிச் சுழற்றி அடிக்கின்றன.

அவனுடைய இதயப் போராட்டத்தை நிறுத்த அவனாலேயே முடியவில்லை. கண்ணம்மாளுக்கோ, ஒரு நிமிடம் போவது ஒரு யுகமாக இருக்கிறது. பதில் சொல்லாமலிருப்பதால் ஆத்திரமும் ஆவலும் ததும்ப அவன் முகத்தையே மிகவும் பரிதாபத்துடன் எதிர்பார்த்துத் துடிக்கிறாள்.

குழப்பத்திலே போராடும் உள்ளத்துடன் முரளி கண்ணில் நீர் ததும்ப கண்ணம்மாளைப் பார்த்து ''கண்ணம்மா! நீ சொல்லுவது முற்றிலும் உண்மையா! என் மூளை என்னவோ குழம்பித்துடிக்கிறதே!...நான் படித்த படிப்பும், வகிக்கும் உத்யோகத்தின் திமிரும் என்னை இப்படியாஅடியோடு பாழாக்கி விட்டன. உண்மையில் கிருபாவதியை நீங்கள் யாரும் பார்க்கவே இல்லையா!...

கண்ண:—ஈச்வர சாக்ஷியாகப் பார்க்கவே இல்லை. என் வார்த்தையில் நம்பிக்கை இல்லை என்றால் என் கணவரிடம் நேரில் கேளுங்கள். நான் இங்கு வருவதே அவருக்குத் தெரியாது. உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக்கூத்தாடி எப்படியும் அழைத்துக்கொண்டு போவதென்கிற துணிபுடன் வந்துவிட்டேன். தயவுசெய்து எழுந்து இப்போதே வாருங்கள். இன்னும் அரைமணி நேரத்தில் ஒரு வண்டி இருக்கிறது. நண்பரே!...என்னிதயத் துடிப்பை சோதிக்கவேண்டாம்.'' என்று கெஞ்சும்போது குழந்தை ப்ரேமாமணி விளையாடிக்கொண்டே 'அப்பா! அப்பா!' என்று கூவியவாறு ஓடிவந்தது.

குழந்தையைப் பார்த்த கண்ணம்மாள். ''ஹா!... இது என்னருமை க்ருபாவதியின் குழந்தையா! ப்ரேமாமணியா?... என் ராஜாத்தியா... ஐயையோ! தூக்கத்தில் ''என் ப்ரேமா! என் ப்ரேமா!'' என்று வாய்ப்பிதற்றிய பேதைப்பெண் இப்போது எப்படித்தான் பிரிந்திருக்கிறாளோ! உம்... விதி... விதி... தலைவிதி... என்பதுஇதுதான்போலும்' என்று கூறிக்கொண்டேகுழந்தையை வாரியணைத்துப் பல முத்தங்களிட்டுப் பின், ''என் கண்ணே! உனக்காகவாவது உன் தாயாரின்

பயித்தியம் நீங்கி உன்னை எடுத்துக் குலாவி மகிழக்கூடாதா! அந்த ஆனந்தத்தை என் கண்ணாரக் கண்டு களிக்கும் காலம் வராதா? என் ரத்தினமே!"... என்று உள்ளூறப் பீறிக்கொண்டு வரும் அன்புடன் கூறிக் கண்ணீர் வடித்தாள்.

இந்த ஆழமான அன்பைக் கண்டு முரளியின் உள்ளம் உருகியது. யாரோ அன்னியள். சினேகம் செய்த பாசத்தினால் இத்தகைய உள்ளாழ்ந்த அன்பை வைத்திருக்கிறாளே! அக்கினி சாக்ஷியாய் மணந்து அவளுடன் சகல விதத்திலும் மகிழ்வடைந்து பேரானந்த சொர்க்கம் இதுதான் என்று நினைத்துப் பூரித்த உள்ளம் வேம்பாகிவிட்டதே...நன்றிகெட்டப் பன்றி நானேயன்றி வேறு அகப்படுவார்களா! ஐயோ! இத்தகைய கிராதகனின் தூர்த்தச் செய்கையையும் மறந்து எனது சந்தோஷத்தைக் கோரி, தான் சக்கரையைப்போல் கரைந்து உரு மாறி பயித்தியமாக நடித்து சக்கரையின் இனிப்பை எனக்கு அர்ப்பணம் செய்த உத்தமியை நான் மனதினாலாவது நினைத்தேனா?" என்று நினைக்கும்போது துக்கம் தாங்கமுடியாது பீறிக்கொண்டு வந்த வேகத்தில் புலம்பியபடியே,

"கண்ணம்மா! மகா சத்தியசீலனாகிய உன் புருஷனின் கால் தூசிக்கும் நான் ஈடாக யோக்யதை அற்றிருந்தும் என்னை... இந்த அல்பப் பதரை அவன் உயிரினும் சீரிய பொருளாக நேசித்து உத்தம லக்ஷணத்தை நிலை நாட்டுகிறான். நானோ, அத்தகைய பாகவத குணம் நிறைந்த சிகாமணியை அநியாயமாக எண்ணியதோடு அவ்வுத்தமியையும் துன்மார்க்கமாகவே எண்ணினேன். உன் ஆப்த சினேகிதைக்கு உண்மையில் பயித்தியம் பிடிக்கவில்லையாம்...பயித்தியமாக நடித்து தன்னை த்யாகம் செய்துகொண்டு எனக்கு சந்தோஷத்தை அள்ளிக்கொடுத்த ரகஸியத்தை இப்போதுதான் அறிந்தேன். கண்ணம்மா...

இந்த வார்த்தையைக்கேட்ட கண்ணம்மாள் தீயை மிதித்தவள்போல் அலறியவாறு "என்ன!...என்ன சொன்னீர்கள்?...க்ருபாவதிக்கு உண்மையில் பயித்தியமில்லையா! நிஜமாகவா...நண்பரே...சத்தியமாகவா...ஐயோ! பயித்தியக்கார ஆஸ்பத்திரிகள் ஒன்று விடாமல் என் கணவர் தேடியலைந்தாரே... உண்மையில் பயித்தியமாக இருந்தால்தானே கிடைத்திருப்பாள். அடாடா!... என்ன உயர்ந்த குணமும் த்யாகமும் கொண்ட உத்தமி...ஐயோ!... இப்போது என் கவலை அதிகமாகிவிட்டதே...இந்த செய்தியைக் கேட்டால் என் கணவரின் உயிர் துடிக்குமே...ஒருபுறம் சந்தோஷமும் பொங்குமே...இந்தத் தகவலை உமக்கு யார்சொன்னது?" என்று கண்ணீர் விட்டவாறு கேட்டாள்.

முரளி:—கண்ணம்மா! என்னால் பேசவே முடியவில்லை. இத்தனைக்கும் காரணம் நானும் என் தாயாருந்தான் என்பது இந்தப் பாவிக்கு இப்போதுதான் திட்டமாகத் தெரிகிறது. மகா ராக்ஷஸியாக என் தாயார் இருப்பினும் இவ்வளவு மோசமாக நான் நினைக்கவில்லை. அந்தப் புண்யவதிதான் இந்த ரகஸியத்தை விபரீதமான முறையில் கயிறு திரித்துக் கூறினாள்.

அந்தக் கயிற்றை நான் உண்மை என்று நம்பி என் கழுத்திற்கே சுருக்காக மாட்டிக்கொண்டேன். அந்த வேகத்தில்தான் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வந்துவிட்டேன். அன்றுமுதல் கிருபாவதியும் உன் கணவனும் எனக்கு த்ரோகம் செய்துவிட்டதாகவே எண்ணி நான் அந்த அவமானம் தாங்காது இந்த ஊருக்கு வேலையையும் மாற்றிக்கொண்டு கண்மறைவாக வந்துவிட்டேன். இதே ஆத்திரத்தில் நான் உன் கணவனையும் வெறுத்தேன். என் உத்யோகத்தின் கவுரவத்திற்காகவும் எனது பட்டம் பதவியின் கண்ணியத்திற்காகவும் இந்த ஆத்திரத்தைக் கிளறி உலகமறியச் செய்யாது அடக்கிவந்தேன்.

கண்ணம்மா! இந்த அநியாயக் கொள்ளையின் ரகஸியம் இப்போதல்லவா தெரிகிறது? எனது கிராதகத்தனம் என்னை வீணாக விடுமா! உம்...இனி பேசிப் பேசி காலத்தைக் கடத்துவதில் லாபமென்ன! கிளம்பு! இப்போதே கிளம்பு... என் காரிலேயே நேரே போவோம்...மகா பாவியான நான் என் அன்பரின் முகத்தை எப்படித்தான் பார்ப்பேன்?"...என்று விசனித்தவாறு எழுந்தான்.

குழந்தையை எங்கே விட்டுவிட்டு வந்துவிடுவானே என்கிற சந்தேகத்தால் கண்ணம்மாள் முதலில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, "நண்பரே! அவர் குழந்தையைப் பார்க்க மிகவும் ஆவலுள்ளவராயிருக்கிறார். இதையும் எடுத்துக்கொண்டு போகலாம்...எங்கே தங்கள் மனைவியைக் காணவில்லை? நான் பார்க்கக்கூடாதா !" என்றாள்.

முரளிக்கு அப்போதுள்ள மனநிலைமையில் வெறுப்பும் ஆத்திரமும் கோபமும்தான் ஒன்றுகூடியதேயன்றி மற்றென்றும் பிடிக்கவே இல்லை. தன் மனைவி நாகராஜன் விஷயத்தில் செய்துள்ள சதிக்கு அவளை நினைக்கும்போது கொடிய ஆத்திரம் மூண்டது. வெறுப்புடன் "உம்...மனைவியாவது, மறலியாவது, அந்த வயித்தெரிச்சலைக் கிளப்பாதே...ஒரு மனிதனுக்கு சுயபுத்தியும் இல்லாது, தெய்வபக்தியும் நம்பிக்கையும் இல்லாது, தான்தோன்றியாகத் திரிந்தால் அவன் அடையும் பலன் இதுதான் என்பதை என் வாழ்க்கையே எனக்குப் பாடம் கற்பித்துவிட்டது.

க்ருபாவதிமட்டும், வெளியழகைப் பற்றி நான் புகழ்ந்து பேசும்போதெல்லாம் அதை வெறுத்தே பதில் சொல்வாள். அதன் உண்மையை இப்போதுதான் அறிகிறேன். வெளியழகிலேயே நான் என்னறிவைப் பறிகொடுத்தலைந்ததன் பலன் ஒன்றிரண்டல்ல. இளைய மனைவியின் வெளியழகின் மோகத்தில் மூழ்கினேன். அவள் தகப்பனார் பெரிய பணக்காரர் என்று என் தாயார் அதற்குமேல் குதித்தாள். கண்ணம்மா! என் வயித்தெரிச்சலைக் கிளறாதே. என் மாமனார் தனது உத்யோகசாலையில் ஏதோ பெரிய தண்டாபேரம் செய்ததன் பலனாக வேலையும் போய் கடனால் மானம் போவதைத் தாங்காது தற்கொலைதான் புரிந்துகொண்டாரோ அல்லது எங்காவது ஓடித்தான் போய்விட்டாரோ தெரியவில்லை. அந்த அவமானத்தின் கொடுமை வேறு என்னை வதைக்கிறது. பேமி தன் தாயாருக்குத் தேறுதலளிக்கப் போயிருக்கிறாள்.

ஒரு மனிதனின் மூளை குழம்பிப்பாழாவதற்கு இதைவிட வேறு சோதனைகள் வேண்டுமா! சரி!...இந்த கஷ்டங்களைப் பேசினால் முடிவே இல்லை. இப்போது நாம் முதலில் 'க்ருபாவதியை எங்கு தேடிப் பிடிப்பது? அவளுக்கு நான் செய்துவிட்ட த்ரோகத்திற்கு எனக்கு மன்னிப்பு என்பது கிடைக்குமா!" என்று கூறும்போது அவனால் பேசவே முடியாது போய்விட்டது. கண்ணீரை அடக்க முடியவில்லை. பிறகு எல்லோரும் காரிலேயே ப்ரயாணமானார்கள். காரும் மாயமாய்ப் பறந்தது.

48

எத்தகையோருக்கும் ஆத்திரம் மிஞ்சிவிட்டால் அது உடனே அனர்த்தமாக மாறிவிடுவது சகஜந்தானே ! தன்னை இக்கதிக்கு ஆளாக்கியதற்கு முக்கால்வாசி உதவி செய்தது தன் மாமியார்தான் என்பதை நன்கறிந்த உள்ளம், நாகராஜன் மீதும் தன் கணவன்மீதும் மாமியார் கூறிய அக்ரமச் செய்தியை இது உண்மைதானா ! அப்படி நாகராஜன் செய்திருப்பானா என்றும் நினைக்கத் தொடங்கியது.

என் விஷயத்தில் மானம் தெருவில் பறந்தபிறகு இனி யாருக்காக நான் தாக்ஷிண்யப்பட்டுச் சாகவேண்டும்? நடுத்தெருவில் நிற்கவைத்த பாவிகளை நேருக்கு நேராக ஏன் சண்டைபிடித்து அவர்களின் மானத்தை வாங்கக்கூடாது. என்னை வெறுத்து ஒட்டியபிறகு என் ப்ரேமாமணிமட்டும் அவர்களுக்கு எதற்காக வேண்டும்? 'கெட்டுப்போனவளுடைய பெண்...ஓடிப்போனவளுடைய பெண்' என்ற பட்டத்தை அதன் தலையில் சூட்டிக் குழந்தையின் வாழ்வையும் பாழ்படச் செய்ய நான் ஏன் விடவேண்டும்?

போதும் இப்பூலோகவாழ்வு. என் குழந்தையையும் தூக்கிக்கொண்டு வந்து அதையும் சமுத்திரத்தில் போட்டுவிட்டு நானும் ஏன் சாகக்கூடாது? இந்தப் பாவியின் சரிதம் அதோடு ஓய்ந்துவிடுமல்லவா ! பிறகு நினைப்பாருமில்லை; பேசுவாருமில்லை. ஏன் அதைச் செய்யக்கூடாது" என்கிற அதீதமான எண்ணம் ஒன்று மனத்தில் அதிவேகமாகக் கிளம்பி எழுந்தது.

தன் குழந்தையைத்தான் தூக்கிக்கொண்டு சமுத்திரத்தை நோக்கி ஓடுவது போலும், அங்கு கப்பல்களும் படகுகளும், படகிலிருப்பவர்களும் தன்னைப் பார்த்து, "ஐயோ! கொலை செய்யவருகிருள், கொலை கொலை' என்று கத்துவது போலும், தான் ஆதியில் பள்ளியில் படித்தகாலத்தில் இருந்த அருமை பெருமையும், இப்போதுள்ள சிறுமையும் அவள் கண்களில் உண்மைபோல் உருவெளித்தோற்றமாகத் தோன்றின.

அடுத்தக்ஷணமே நடுநடுங்கி..."ஐயோ!... கொலை செய்யவா துணிந்தேன்... என் கண்மணி ப்ரேமாவையா கொலை செய்யத்துணிந்தேன்?... ஹா... பாவி... சண்டாளீ! கிருபாவதி!... நீ இத்தகைய கொடிய பாபிஷ்டியாகவா மாறிவிட்டாய்? உன் பொறுமையும் இத்தனை சடுதியிலா மண்ணோடு மண்ணாக மங்கிவிட்டது. நீ கற்றறிந்த நீதி எல்லாம் எந்தக் கடலில் கரைந்துவிட்டது. நீ பிழைக்கும் பிழைப்பிற்கு பழி தீர்ப்பது ஒரு கேடா! உன் கணவனின் சந்தோஷத்தை நீ தேடியளித்த மகிமையை மறந்து அதைக் குலைக்கவா முற்படுகிருய்? சீச்சீ! த்ரோகி! கிராதகி...

உன் வினை உன்னைவிடுமா! நீ செய்துள்ள பாதகச் செயலை உன்னால் மாற்றமுடியுமா! வினையைவிதைத்தவன் வினையை அறுக்காமல்தினையை அறுக்க முடியுமா! ஆனது ஆயிற்று. இனி நீ ஏன் பதறிப் பின்னும் பாபக்குழியில் வீழ்ந்து மாளப் பார்க்கிருய்?...போ...உன்னைக் காக்கக் காத்திருக்கும் மகமாயியின் காலடியில் போய் விழு. அவளைச் சரணம் புகுந்து உன்மீது இத்தகைய அபாண்டங்கள் வந்து சார்ந்த மகத்தான பாவத்திற்கு அவளிடம் பரிகாரம் தேடி வேண்டிக்கொண்டு முறையிடு. உபவாசமிருந்து கதறியழு.

கிருபாவதீ! இனி உனக்கு வேலையும் வேண்டாம்; வெட்டியும் வேண்டாம் போதும்;..உன் மதுரகீதத்தை மகமாயிக்கே அர்ப்பணம் செய்து முடிவுக்காவது இன்பத்தைத் தேடு" என்று தனக்குத்தானே ஆவேசம் வந்தவளைப்போல் எண்ணமிட்டவாறு கால்கள் போனவழியே நடந்து ரயிலேறிஞள்.

தனக்கு முதல்முதல் ஆபத்துக்காலத்தில் அடைக்கலம் புகலிடமளித்த அதே மகமாயியின் கோயிலில் பேரிய மனக்கொதிப்புடன் விழுந்துவிட்டவள் தனது உத்யோகத்தையும் மாற்றலையும் அடியோடுவெறுத்து ராஜிநாமாக் கடிதமொன்று எழுதியனுப்பிவிட்டாள்.

இவளை ஆதரித்த பெரியவர்மட்டும் "இன்னும் லக்ஷ்மீபாய் வரவில்லையே! எங்கு போயிருக்கிருளோ தெரியவில்லையே! நாட்கள்மட்டும் ஆய்விட்டதே" என்று தினம் இவள் வரவை எதிர்பார்த்துப் பார்த்துக் குழம்பினர். எவ்விதமான தகவலும் இல்லை. மாற்றலான ஸ்டேஷனுக்கு ராஜிநாமாக் கடிதம் வந்துவிட்டதென்றும் வேறு ஆள் வைத்தாகிவிட்டதென்றும் தகவல் தெரிந்து அவருக்கு க்ருபாவதியிடம் முதலில் கோபமும் பிறகு மர்மமறியாததனல் குழப்பமும் உண்டாகியது. "பேரா, ஊரா, விலாஸமா ஒன்றுமே தெரியாத நிலைமையில் அந்த மகா உத்தமியை... புத்திசாலியை எங்கு தேடுவது... ஒரு வேளை சண்டைக்குச் சென்றிருந்த அவள் கணவன் இறந்துவிட்டானே! அந்த தகவல் தெரிந்து துக்கத்தில் இவைகளைத் துறந்துவிட்டாளோ? கைம்பெண்ணுகியபிறகு இங்கு வரக்கூடாது என்கிற சம்பிரதாயமுறைக்கு அஞ்சி இத்தகைய மர்மம் சாதிக்கிருளோ! எது இருப்பினும் ஒரு கடிதம்கூடவா போடக்கூடாது! எல்லாம் பூடகமாயும் மூடுமந்திரமாயும் இருக்கிறதே...அந்தம்மாளுடைய பணமும் நம் கையில் இருக்கிறது. இதை எப்படி அவர்களிடம் சேர்ப்பது...எதற்கும் அம்மன்கோயிலுக்கு தர்மம் கொடுத்திருப்பதால் அங்கு விசாரித்தால் ஏதாவது தகவல் தெரிகிறதா பார்க்கலாம்" என்று ஒரு யோசனை தோன்றியது. உடனே பூசாரிக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டார்.

அப்போது தேகமெல்லாம் தளர்ந்துபோய் நறைத்த தாடியும் மீசையும் விகாரமாகப் படர்ந்துள்ள ஒரு கிழவர் அங்கு வந்தார். அவரை யாரென்று நாம்

கூறவேண்டுமா! க்ருபாவதியின் மாமனாராகிய விச்வநாதன் தான் என்பது சடக்கென்று தோன்றுமல்லவா!

கிருபாவதியைத் தேடியலையும் சாக்கில் கன்யாக்குமரிமுதல் கங்கைவரையில் சுற்றியலைந்தார். அவர் இதயத்துடிப்பைக் கூறமுடியவில்லை. ரேடியோவில் அடிக்கடி கிருபாவதியின் குரல்போலவே கேட்பதை சில தினங்களுக்கு முன்புதான் கேட்ட அவர் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி உதயமாகியது.

ரேடியோ நிலயத்திற்குக் கடிதமெழுதி விசாரித்ததில் லக்ஷ்மீபாய் என்றும், ஒரு முக்யமான உத்யோகஸ்தரின் உறவினரென்றும் ரகஸியமாகக் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு விசாரிப்பதற்கு வந்தார். தாமோதரம் என்கிற உத்யோகஸ்தரின் விலாசத்தை விசாரித்துக்கொண்டு நேராக இவ்விடமே வந்து சேர்ந்து, தான் இன்னார் என்பதையே சொல்லாமல்... சார்!... இங்கு உங்கள் உறவினர் லக்ஷ்மீபாய் என்பவர் இருக்கிறாராமே. அவருடைய கணவர் சண்டைக்குப்போயிருக்கும் இடத்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார். அவளுடன் பேச வேண்டும்; சற்று கூப்பிடமுடியுமா?" என்றார்.

உத்யோகஸ்தரான தாமோதரன் ஏற்கெனவே தாம் கவலைப்பட்டுக்கொண்டிருந்ததற்கு ஒத்தார்போல் இவர் பேசுவதைக் கேட்டு இதை உண்மையென்று நம்பி, "சார்! கடிதம் வந்ததா! அவர் சௌக்யமாயிருக்கிறாரா...அபாட! இப்போதுதான் எனக்கு மனது நிம்மதியாயிற்று. நான் விகல்பமாக நினைத்தபடி எதுவும் இல்லை என்று நிச்சயமானாலும் முதலுக்கு மோசமாகவிருக்கிறதே. அந்தப் பெண் தனது சினேகிதர்களைப் பார்த்து வருவதாக வெளியூர் சென்று பத்துநாட்களுக்குமேலாகிறது. இன்னும் எவ்விதமான தகவலும் தெரியவில்லை. அவள் மகா உத்தமி. வெகு கெட்டிக்காரி. ஒரு கடிதங்கூடப் போடாதிருப்பதனால் தான் நான் வித்யாசமாகச் சந்தேகித்தேன். நானும் சிலருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். தகவல் ஏதாவது கிடைத்தால் சொல்லுகிறேன். அவள் உமக்குத் தெரிந்தவளா?' என்றார்.

விச்வநாதனின் உள்ளத்தில் செய்யும் சங்கடத்தை எப்படித்தான் மறைப்பது? உண்மையைச் சொல்லிவிடலாமா என்றும் எண்ணினார். ஆனால் எக்காரணத்திற்காகவோ, அவள் சகலத்தையும் மாற்றி இருக்கையில் இப்போது திடீரென்று சொல்லிவிட்டால் என்னவாகுமோ!' என்றும் யோசனை செய்தார்.

தன் மகனையும், மருமகளையும் எண்ணி வெதும்பினார். லக்ஷ்மீபாய்தானா க்ருபாவதி என்பதை இன்னும் நன்றாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, சற்று சமாளித்துக்கொண்டு, "உம்...நன்றாகத்தெரிந்தவள்தான். பாவம்! அவளுக்கு மகமாயிகூட விளையாடியிருப்பதாக...

என்று இழுத்துமுடிப்பதற்குள் தாமோதரன் ஆமாம், ஆமாம்; மகமாயி சாமான்யமாக விளையாடவில்லை. உருவமே குலைந்துவிட்டதாம். மகமாயியின் கோயிலில்தான் நான் அந்தம்மாளைச் சந்தித்தேன். எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. நானும் பிள்ளைகுட்டிக்காரன்தான். என்னைவிட என் மனைவிதான் அந்தம்மாளைத் தன் சகோதரிபோல் நேசிக்கிறாள். அந்தம்மாளின் சங்கீதத்தின் அத்புதத்தை என்ன சொல்லுவேன்போங்கள். மதுரகீதம் என்றால்மிகையாகாது.

அத்தகைய அருமையான பொக்கிஷத்தைப் பாழாக்குவானே என்று எனக்கும் என் மனைவிக்கும் தோன்றியது. உண்மையில் அந்தம்மாள் என் உறவுமில்லை. ஒன்று'மில்லை. பரதேசி, பாவம். அதிலும் மகா புனிதவதி. வெகு உத்தமி. சதா புலம்பிப் புலம்பிச் சாவதைவிட தன்னுடைய சங்கீதத்தைப் பிறருக்கும் உதவி தானும் ஆத்மார்த்தகமான த்ருப்தியடையட்டுமென்று நாங்கள் கூறி அந்தம்மாளை ஒப்புக்கொள்ளச்செய்தோம்.

ஏதோ அம்மனின் கிருபையில் சங்கீதக் கச்சேரிகளும் ஏராளமாகச்செய்து சுமார் 10000 ரூபாயிக்குமேல் அம்மன்கோயிலுக்கே தர்மம் செய்துவிட்டார்கள். இன்னும் கூட என்னிடம் கொஞ்சம் ரூபாய் இருக்கிறது. சம்பள உயர்வும் நல்ல பெயரும் வரும் சமயம் திடீரென்று காணவில்லையே என்றுதான் நானும்

விசனிக்கிறேன். பரதேசியானதால் என்னை உறவினரென்றே சொல்லி வருகிறாள் பாவம். தானுண்டு, தன் வேலையுண்டு. இத்தகைய மகா லக்ஷ்மியை விட்டுவிட்டு, இந்த அத்புதமான மதுரகீதத்தையும் துறந்துவிட்டு அவள் கணவன் சண்டைக்குப்போக எப்படித்தான் மனந்துணிந்ததோ! இந்த சங்கீதமே ஏழு குடியைக் காப்பாற்றுமே. அதைவிட்டுப் பாவி ஏன் போனான் என்று நாங்கள் திட்டினால் அந்த உத்தமி சகிக்கமாட்டாள். கணவன்மீது தூசிகூடப் படஎண்ண மாட்டாள். அத்தனை அன்பும் நம்பிக்கையும் இன்னமும் வைத்துக்கொண்டிருக்கும் மனைவிக்கு அந்தச் சண்டாளன் ஒரு கடிதங்கூட எழுதுவதில்லை. இருக்கிறானோ! செத்தானோ! அதுவும் தெரியவில்லை...

என்று கூறுவதைக் கேட்கக் கேட்க விச்வநாதனுக்கு எப்படித்தான் இருக்கும்? எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் எரிகிறது.அத்தனைக்கும் பாதிகாரணம் தன் மனைவிதான் என்பதை நினைக்க பின்னும் ஆத்திரம் மூண்டு விட்டது. அன்னியர்களால் அவளுக்குக் கிடைத்த ஆதரவுகூட தன்னால் கிடைக்க வில்லையே! "சமயல்காரியின் மகள். சமயல்காரியின் மகள் என்று வாய்க்கு வாய் சொல்லி அவள் இதயத்தை முற்றிலும் புண்ணாக்கி அளியச்செய்த மகாபாவி அதன் பலனை என் கண்முன்பு அனுபவித்தால்தான் என் மனது குளிரும். வெளியழகைக் கண்டு அடிமையான மதியீனன் அதற்குத் தக்க தண்டனையை அடைய வில்லையே! அதே மகமாயி அந்த தாயாருக்கும் மகனுக்கும் விளையாடி தண்டித்து என் வயித்தெரிச்சலைத் தீர்க்கமாட்டாளா!" என்றெல்லாம் விபரீதமாகத் தோன்றுகிறது.

க்ருபாவதியை மறுபடியும் காணவில்லை என்றால் எங்கு போயிருப்பாள் என்கிற கலக்கமும் ஊடே எழுந்து வதைப்பதால் தனது நிலைமையைச் சமாளித்துக்கொண்டு "சரி...நான் நாளை மறுபடியும் வருகிறேன்" என்று கூறிச் சென்றார். அவர் இதயத்திலோ பதினாயிரம் தேள் கொட்டியதுபோல் சங்கடம் செய்கிறது. இப்போது நேரே எங்கு போவது என்ன செய்வது என்பதையறியாது உள்ளம் உருகியது.

49

மோட்டாருடன் கிளம்பிய முரளியின் மனது துடிக்கின்றது. நாகராஜனை எப்படிப் பார்ப்பது என்கிற நடுக்கலுடன் ஆஸ்பத்திரியை அடைந்தான். நாகராஜனுக்கு அப்போது அசாத்ய ஜுரம் காய்கிறது. அவன் எலும்பும் தோலுமாய் கட்டிலோடு கட்டிலாகப் படுத்திருக்கும் கண்றாவியைக் கண்டு முரளியின் இதயம் வெடித்துவிடும்போலிருக்கிறது. தலைமீது ஐஸ் வைத்தவாறு நர்ஸ் உட்கார்ந்திருக்கிறாள்.

இந்த நிலைமையில் தன்னைப்பார்த்து அந்த அதிர்ச்சியினால் என்ன நேர்ந்துவிடுமோ! என்கிற பயத்தினால் கண்ணீர் பெருக விக்கி விக்கி அழுதவாறு கட்டிலருகில் முரளி அசையாப் பதுமைபோல் நின்றுவிட்டான். கண்ணம்மாளுக்கு பயம் நடுங்குகிறது. "ஆம்...நான் அந்தப் புண்யவதிக்கு எமனாக இல்லாதிருந்தால் அவளை அந்த மூர்க்கனுக்கு...வெளியழகைக் கண்டு மயங்கும் முட்டாளுக்கு மணம் செய்து வைத்திருப்பேனா...என்ன...கிருபாவதிக்கு பயித்தியமா... என்று நாகராஜன் வாய்ப் பிதற்றினான்.

நர்ஸ் கண்ணம்மாளைப்பார்த்து "நேற்று இரவு முதல் இதே மாதிரி பிதற்றுகிறார். என்ன சொல்லியும் கேட்கமாட்டேன் என்கிறார்...சில சமயம் நன்றாகத் தெளிகிறபோது கண்ணம்மாள் எங்கே என்கிறார். எனக்கே பயமாக இருக்கிறது. பெரிய டாக்டருக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன்" என்றாள்.

இதுகேட்ட கண்ணம்மாளின் தலை சுழன்றது. நாகராஜனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவன் முகத்தோடு முகம் பதித்து, மெல்லிய குரலில் அன்பு ததும்பும் த்வனியில் "ஸ்வாமீ! தலைவலிக்கிறதா! இதோ பாருங்கள் நானே நேரில் சென்று உங்கள் நண்பரை அழைத்துவந்திருக்கிறேன். இதோ ப்ரேமாகூட வந்திருக்கிறாள். க்ருபாவதிகூட சவுக்யமாயிருக்கிறார்களாம்.

மதுர கீதம்

கவலைப்படாதீர்கள்'' என்று கூறிய அமுத மொழிகளைக் கேட்டு, நாகராஜன் ஆவலே வடிவாகக் கண்ணைத் திறந்து முதலில் பார்க்கும்போது ப்ரேமாவே அவன் கண்ணில் பட்டாள்.

“ஹா...ப்ரேமா...ப்ரேமா...என் கண்மணீ!''...என்று குழந்தையை முகத்தோடு முகம் பதித்தான். அந்த ஆயாஸத்தில் அப்படியே அயர்ந்துபோய் பின்னும் மவுனமானான்...சில நிமிஷங்கள் கழித்து மீண்டும் கண்ணைத் திறந்து கண்ணம்மாளை உற்றுப்பார்த்து “கண்ணம்மா !...கிருபாவதி சவுக்கியமா யிருக்கிறாளா ! எங்கே...யார் சொன்னது? உண்மையாகவா...பயித்தியம் தெளிந்துவிட்டதா... உம்...முரளீ !...உன்னை நான் ஆப்த மித்திரன் என்றும், ஆருயிர் நேசன் என்றும், அறிவில் சிறந்த உத்தமன் என்றும் நம்பினேன்...பரிபூர்ணமாக நம்பினேன். நம்பியதற்குப் பலன்... இதோ ! இந்த மரணப் படுக்கைதான்.

முரளீ! வெளியழகு குறைந்ததென்று ஒரு உத்தமியின் வயிறைத் துடிக்கச் செய்த பாதகம் உன்னை ஏழேழு தலைமுறைக்கும் விடுமா ? அதே மகமாயி விளையாடி உன் அங்கத்தையே ஊனம் செய்துவிட்டால் நீ என்னசெய்வாய்? நீ உன் மனைவியைத் தள்ளியதுபோல் உன் மனைவி உன்னைத் தள்ளிவிடமுடியுமா? தள்ளுவாளா ? பெண்மணியின் இதயம் அத்தகைய ராக்ஷஸ செயலுக்கு இடங் கொடுக்குமா ? முரளீ ! அன்று நீ இருந்த அழகு இன்று இருக்கிறாயா ? உற்றுப் பாரு...உன்னுடைய கதுப்பான கன்னங்கள் எங்கே மறைந்தன? உன்னுடைய பளபளப்பான மேனியின் நிறம் எப்படி குலைந்தது? கருவண்டு மொய்ப்பதுபோ லிருந்த கூந்தல் ஏன் செம்பட்டை நிறம் வந்து பழுத்துவிட்டது? அகன்று விசாலமாயிருந்த கண்கள் ஏன் , இடுங்கி சோபை குறைந்து கரைமீதுபோட்ட மீனைப்போலிருக்கின்றன,

மடத்தனம் அழகாம் அழகு...அழகுக்கு நீ அடிமை...அன்புக்கும் அறிவுக்கும் நான் அடிமை. என் கண்ணம்மாளின் கண்ணை எனக்கு மகமாயி கொடுத்துதவியது எதனால்? அன்பு வேகத்தினால். கண்ணில் பூ விழுந்துவிட்டதே என்று அவளை நான் உதாசீனமாகத் தள்ளியிருந்தால் மகமாயி என்னிரு கண்களையும் வைப்பாளா...முரளீ...நீ இத்தகைய பெரும்முட்டாள்'' என்று நான் நினைக்கவில்லை. உபயோகமற்ற வெறும் பகட்டான...சாச்வதமற்ற...வெளி யழகுக்கு ஆசைப்பட்டு நீ எத்தனை பாதகத்தைச் செய்துவிட்டாய்...அக்கினிசாக்ஷியாக மணந்த பத்தினியைத் துடிக்கவைத்தாய். பெற்ற பிதாவின் இதயத்தை நோகச் செய்தாய்...உனக்கு பெண் கொடுத்த பலன் அவ்வுத்தமியின் அன்னையைக் கொலைசெய்தாய். மாமனை நாடோடியாக்கினாய். ஏற்கெனவே சதிகார யோசனை செய்த தாயாரைப் பின்னும் படுகுழியில் தள்ளினாய். அந்தச் சண்டாளி, தான் செய்த த்ரோகத்தை எல்லாம் மறந்து உனக்கு நான் த்ரோகம் செய்து அவ்வுத்தமியை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக உனக்கு வேறு தூபம்போட்டு என் புண்ணான இதயத்தில் காய்ச்சிய வேலைப் பாய்ச்சுவதுபோல் கூறி, கலங்கிக் குழம்பியுள்ள உன் மூளையைப் பின்னும் கலக்கிய ரகஸியத்தை நேற்று இரவு தான் நான் உங்கள் வீட்டுப் பழய ட்ரைவர் மூலமறிந்தேன்.

அந்த அதிர்ச்சிதான் எனக்கு ஜுரம் ஏறிவிட்டது. முரளீ ! நான் அத்தகைய கிராதகச் செய்கையைச் செய்திருந்தால் இப்போதே அதற்கான தண்டனை எதுவாயினும் ஏற்றுக்கொள்ளத் தயார். என்னருமை மனைவியையும் என் குழந்தையையும் நடுத்தெருவில் விட்டு உன் கையால் மரணமடையவும் தயார். ஆனால் என்மீதும் அந்த பதிவரதா சிரோன்மணியின்மீதும் இத்தகைய எரிமலையைப் புரட்டிய உன் தாயாரை அந்த ஆண்டவனும்...மகமாயித்தாயும் சரியாகப் பார்த்துக்கொள்வார்கள். அவர்களும் உன் தாயாரைப்போல் குடிகெடுக்கும் குண்டுகளிகளல்ல. கலகத்தை தீபோல் வளர்த்துக் குடும்பத்தை எரித்துக் கொலைசெய்த பாதகியைப் பார்த்துக்கொண்டு பல்லிளிக்கமாட்டார்கள். இங்குள்ள ஒரு நர்ஸுக்கு உன் பழய ட்ரைவர் உறவாம். அவளைப் பார்க்க அகஸ்மாத்தாக வந்தவிடத்தில் என்னைப் பார்த்துச் சில விஷயங்களையும் சொன்னான்.

முரளீ! அதைக் கேட்டது முதல் என் உயிர் துடிக்கின்றது. நான் சாக விரும்பவில்லை. செத்துவிட்டால் என் வயிற்றெரிச்சல் தீராது. உன் தாயை பகவான் தண்டித்து அதைக் கண்ணாரக்கண்டு களிக்கவேண்டும். அப்போது தான் என்னுவலடங்கும்...அந்தோ!... ஆண்பிள்ளையாகிய எனக்கே இத்தகைய ஆக்ரோஷம் வரும்போது அந்த அப்பழுக்கற்ற நாரீமணியின் உள்ளம் இந்த கொடிய பாணம்போன்ற வசையால் என்ன துடித்ததோ? எப்படித் தற்கொலை செய்துகொண்டார்களோ? இல்லாவிட்டால் இப்படி எவ்விதமான தகவலும் இல்லாதிருக்குமா?...

என்று வயிற்றிலிருந்து பீறிக்கொண்டு வரும் ஆவேசத்துடன் பேசிய அதிர்ச்சியில் மறுபடியும் களைத்துப்போய்விட்டாள். முரளியின் நிலைமையை இப்படித்தான் என்று விவரித்து யாராலாவது கூறமுடியுமா! சாணியைக் கரைத்துக் கொட்டி செருப்பாலடித்ததுபோலும். செம்மட்டியால் அடித்தது போலுமான உணர்ச்சி வெள்ளத்தில் துளைகிறன். கண் திறக்கவும் பேசவும் கரையே தெரியாது திணறுகிறன்.

நாகராஜன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவனை ஜாட்டியாலடிப்பது போல் தோன்றுகிறது; எனினும் எல்லாம் வெகு நியாயமாயும், தான் மன்னிக்க முடியாத குற்றவாளியாகிவிட்டதையும் எண்ணி எண்ணி வெதும்பி பெருமூச் சுடன் கண்ணீரைப் பெருக்கியவாறு நிற்பதைத் தவிர பதில் பேசமுடியவில்லை.

கண்ணம்மாள், 'இத்தகைய ஆத்திரத்துடன் ஆவேசமாகப் பேசுவ தால் என்ன நேருமோ!' என்கிற பயத்தால் எத்தனைத் தடுத்தும் அவன் நிற் கவே இல்லை. மெஷின்போல் ஆத்திரம் தீர, படபடவென்று நிலைமை அறியாது கூறியதால், மிகவும் மூர்ச்சையடைந்துவிட்டான்.

நர்ஸ் சொல்லியனுப்பியிருந்த பெரிய டாக்டர் சமயத்திற்கு வந்து சேர்ந் தார். "இத்தனை கடுமையான ஜுரத்தில் பேச்சுக்கொடுத்து அதிர்ச்சியை உண் டாக்கலாமா! தெரிந்தவர்களா இப்படிச் செய்வது?...நர்ஸ்! உனக்கு புத்தி எங்கே போயிற்று? ஏன் இத்தனை பேர்களை இங்கு அனுமதித்தாய்?"...என்று ஒரு கூப்பாடுபோட்டவாறு நோயாளியைக் கவனித்துக்கொண்டு முரளியையும் அப்போதுதான் உற்றுப் பார்த்தார்.

'ஓ! அடடா! யாரோ என்று பார்த்தேனே! ஸ்ரீமான் ராவ்பகதூர் முரளீதர னல்லவா தாங்கள்! ஏன் ஏதோமாதிரி இருக்கிறீர்கள்? இவருக்கு உடம்பு குண மாகுமா ஆகாதா என்கிற கவலையா! அப்படிக்கொன்றும் பயமில்லை. கட் டாயம் குணமாகிவிடும். கவலைப்படவேண்டாம். இப்படி உட்காருங்கள்' என்றார்.

முரளிக்கு இவர் யார் என்றே தெரியாது விழித்தான். தன்னை இத்தனை நன்றாகப் புரிந்துகொண்டுள்ளவரைத் திருப்பி விசாரிக்காமல் இருப்பதும் மரி யாதையில்லை. ஆகையால் சற்று தயங்கியபடியே "தங்களை...என்று இழுத்தான்.

டாக்டர் கபகபவென்று பெரிதாகச் சிரித்துக்கொண்டே, ஆமாம்..,என்னை இன்னுனென்று உங்களுக்குத் தெரியாது மறந்திருக்கலாம். ஆனல் நான் மட்டும் தங்களையும், தங்கள் அறிவும் ஆற்றலும் மிகுந்த தாயாரையும் மறக்கவே இல்லை. என் மனைவிகூட நாலாவது ப்ரஸவம் ஆகும்போது உடம்பு சரியில்லாதிருந்து மிகவும் கேவலமாகி அழகும் குறைந்து பலமும் ஒடுங்கிப்போய்விட்டாள். அவளைத் தள்ளிவிட்டு வேறு கல்யாணம் செய்துகொள்ளலாம் என்று நினைக்கி றேன். அதற்காக உங்களையும் உங்கள் தாயாரையும் யோசனை கேட்டுச் செய்ய லாமென்றுகூட நினைக்கிறேன். உங்களுக்குத் தாயார் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரி; அதனல் கட்டாயம் எனக்கும் யோசனை சொல்லுவாள்; இன்னெரு பெண்ணையும் தேடிக்கொடுப்பாள்."

என்று டாக்டர் குற்றலாயும் பாண ப்ரயோகம் செய்வதுபோலும் கூறும் வார்த்தைகளை முரளியால் தாளவேமுடியாது தத்தளித்துத் துடிக்கிறன். தான் செய்த சதியின் ப்ரதி பிம்பம் இவனை அப்படியே பயமுறுத்தி விழுங்க வாயைப்

பிளந்துகொண்டு பைசாச வடிவத்தில் நிற்பதுபோல் தோன்றுகிறது. தன் தாயாரைச் சகோதரி என்று கூறுவதால் இவர் யார் என்றும் குழப்பமுண்டாகியது.

இவனுடைய கலக்கத்தைக் கண்ட டாக்டர் “ஏண்டா முரளீ! ஆடு திருடிய கள்ளன்போல் விழிக்கிறாய்! “முத்து மாமா! முத்து மாமா!” என்று சிறிய வயதில் கூப்பிட்டுக்கொண்டு ஓடி வருவாயே அதை மறந்துவிட்டாயா! நான் பல வருஷங்களுக்குமுன்பே வெளியூர்களுக்குப்போய் அந்த தேசங்களிலேயே சுற்றிக்கொண்டிருந்ததால் அடியோடு மறந்துவிட்டாய்போலிருக்கிறது. இந்த பக்கம் வரவேண்டுமென்கிற ஆசையால் நானாகவே மாற்றிக்கொண்டு சென்ற மாதந்தான் வந்து சேர்ந்தேன். வந்தபிறகு உங்கள் குடும்ப பிரபாவத்தையெல்லாம் அறிந்து உண்மையில் உன்னை ஒரு குப்பைக்குச் சமமாக வெறுத்தேன். நேரில் உன் வீட்டிற்கு வந்து உன்னை நன்றாக அலசி அலசி மானத்தை வாங்கவேண்டுமென்றுகூட எண்ணினேன். புதிதாக வந்ததனால் இன்னும் ஓய்வு கிடைக்கும்படி வேலை குதிர்படவில்லை. உன் தாயாரிடம் போய் அவள் செய்துள்ள த்ரோகத்தை உடைத்து பஜீத் செய்யவேண்டுமென்று என் மனைவியும் நானும் துடிக்கிறோம்... மகமாயி வார்த்து அழகு குறைந்ததென்று ஒரு பெண்ணை விலக்கி தீராத பாதகத்தைச் செய்துவிட்டாயே! அதே மகமாயி உனக்கு வந்திருந்தால் என்ன செய்வாய்! இப்போதுதான் வராதென்று நீ என்ன கண்டாய்! சீச்சீ! இது சுத்தமாக நன்றாக இல்லை. உன் தாயாருக்கும் உனக்கும் இந்த நரகங்கள் போதாது. வேறு புதிய முறையில்தான் சிருஷ்டிக்கவேண்டும். தலை குனிவும் நீலிக்கண்ணீரும் எதற்கடா! ராவ்பகதூர் பட்டம் ஒரு கேடா! குற்றமற்ற நிரபராதி மனைவியை துராக்ருதமாகத் தள்ளி வயிறெரியச்செய்த மகா வீரதீர பராக்ரமத்திற்காக சர்க்கார் உனக்கு இந்த பகதூர் பட்டத்தை வழங்கினார்கள்போலிருக்கிறது. உன் தாயாருக்கும் கட்டாயம் ஒரு பட்டம் கொடுத்திருக்கவேண்டும். தூத்தூ!...எனக்குப் பேசவும் பிடிக்கவில்லை.

புதிய மாமனார் உத்யோகஸ்தலத்தில் பட்டைநாமத்தைப் பறக்கச் சாத்திவிட்டு எங்கேயோ கெட்டிக்காரத்தனமாகக் கம்பி நீட்டிவிட்டானாமே! தகப்பனாரின் ஆபத்தை எண்ணி அழுததால் புதிய மனைவிக்கு அழகு குலையவில்லையா! இனி அவளையும் தள்ளிவிட்டு வேறு பெண்ணைப் பார்க்கவேண்டியதுதான்.

முரளீ! நீ செய்திருக்கும் காரியம் மனித ஜென்மம் எடுத்தவன் செய்யும் வேலையே இல்லை. பக்ஷி ஜாதிகளும் சில மிருக ஜாதிகளும்கூட தம் மனைவியிடத்தில் கூறத் திறமற்ற பாசம்வைத்து நேசிப்பதைப் பார்க்கிறோம். அந்த அளவுகூட உன்னிடம் அற்றுப்போய்விட்டதே!... இப்போது அந்தப் பேதைப் பெண் எங்கிருக்கிறாள் என்பதாவது தெரியுமா!... உம்!... கிணத்துத் தவளைக்கு நாட்டுவளம் எப்படித் தெரியும்?...

இந்த வீண் பேச்சில் பொழுது போய்விட்டது. ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள பங்களாதான் நான் இருப்பது. அங்கு வா”...என்று கூறிவிட்டு நோயாளிக்கான மருந்துகளை எழுதி நர்ஸிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். நாகராஜன் மனது சற்று சமாதானமாயிற்று. முரளியின் பரிதாபத்தை யூகிக்கவேண்டுமேயன்றி அளவிட்டுக் கூறச் சாத்யமேது?

50

கிருபாவதி ஆத்திரத்துடன் பேசிச் சாபமிடுவதுபோல் கூறிச் சென்ற உடனே பார்வதியம்மாளின் திகிலும் கலக்கமும் இன்னும் அதிகமாகிவிட்டன. மாதக் கணக்காகத் தன் கணவன்போன இடம் தெரியாதிருப்பதால் அது வேறு திகில்பிடித்து வாட்டுகிறது. மகமாயியின் பெயரைக் கேட்டாலும் பயந்து நடுங்கும் பார்வதியம்மாள் இருக்கும் ஊரில் திடீரென்று மகமாயி அசாத்யமாய் விளையாடுகிறாள். “சில இடங்களில் மும்முரமாக இருக்கிறது. எல்லோரும் ஜாக்ரதையாக இருங்கள்” என்று நகரசபையினர் ஒரு எச்சரிக்கை வேறுபோட்டுவிட்டதைப் படித்ததும் பார்வதியம்மாளுக்கு ஆசாபாசமும் அடங்கிவிட்டது.

வேலைக்காரி இருக்கும் தெருவில் மகமாயி விளையாடுகிறாள் என்பதை யறிந்து அவளை வரவேண்டாமென்று நிறுத்திவிட்டுத் தானே சாணமிட்டுக் கோலம் போடவும் ஆரம்பித்தாள். மாரியாத்தாளுக்கு மடிப்பிச்சை என்றும் மாரியாத்தாளுக்கு ப்ரார்த்தனை சொல்லிக்கொண்டும் சிலஆண்களும் பெண்களும் முகத்தில் நிறைய குங்குமப் பொட்டும் தலையில் மயிரை விரித்துப் போட்டுவிட்டு நாகஸர்ப்பத்தைப்போன்ற பட்டத்தை க்ரீடம்போல் மாட்டிக்கொண்டு ஒரு கையில் நெருப்புச் சட்டியும் ஒருகையில் வேப்பிலையும் எடுத்துக்கொண்டு அரிசி, காசு முதலியன வாங்க வருபவர்களும், அம்மனுக்குக் காப்புகட்டி உத்ஸவம் கொண்டாடி மடியாகக் கூழ்வார்ப்பவர்களும், அம்மனை பலமாக வேண்டிக் கொண்டு குறி கேட்பவர்களுமாக இருக்கும் தடபுடலைப் பார்க்க பார்வதி யம்மாளுக்குக் குலை நடுங்குகிறது.

மகமாயி தனக்கே வந்துவிட்டதுபோன்ற தோற்றமும் திகிலும் ஒன்று கூடி ஜுரம் வந்திருப்பதுபோல் தோன்றும். உடனே தர்மாமீட்டரை வைத்துப் பார்ப் பாள். ஒன்றுமில்லாதது கண்டு சிறிது சமாதானமடைவாள். மகமாயியின் பெயரைக் கூறிக்கொண்டு வரும் எந்த பிச்சைக்காரர்களுக்கும் ஒரு படி அரிசிக்குக்குறையாமல் போடுவதோடு பில்லையாக ஒத்தை ரூபாய்யைப் போட்டு விட்டுத்தாடையில் அடித்துக்கொண்டு "மகமாயி !...காப்பாத்துடீயம்மா !"... என்று வேண்டிக்கொண்டு வருவாள்.

ஊரில் மாரியாத்தாள் எப்படி இருக்கிறதென்று கேட்கக்கூடப் பயப்படு வாள். பட்டம்பகலிலும் சரி. இராக்காலத்திலும் சரி; வீதிக் கதவை அடைத்தே வைத்தாள். மகமாயி மும்முரமாக விளையாடுவதால் மாரியம்மன் ப்ரார்த்தனைக் காரர்கள் தவறாது வருவது அதிகமாகிவிட்டது. பார்வதியம்மாளின் பயமே கிலியே, அவளை உருக்கவாரம்பித்தது. வேதனையுடன் ஒரு தினம் உட்கார்ந் திருக்கையில் வழக்கம்போல் மாரியம்மன் பிரார்த்தனைக்காரர்களின் குரல் பெரியதாகக் கேட்டது.

"ஓ அண்ணே ! ஏழுமலையப்பா...உன் சகோதரி நான் விளையாட வந் திருக்கேன்... நான் கும்பத்து மாரியடீ ! குழந்தை அலங்காரி ! நான் தேசத்து மாரியடீ... நான் தெருவிலலங்காரி... ஓ கொழந்தைகளே !... மகமாயித்தாயி ஒங்களேக் காப்பாத்த வந்திருக்கா "...

என்று பாடியும் ஆடியும் அரிசி வாங்கிக்கொண்டே வந்தார்கள். பார்வதி யம்மாளுக்கு அன்று ஜுரம் உண்மையாகவே காய்கிறது. தர்மாமீட்டரில் 100க்கு மேல் இருந்ததெனினும் பார்வதியம்மாளின் மனத்தில் 105 அடிக்கிற மாதிரியான திகிலும் வேதனையும் பயமும் பிடித்துக் கொலை செய்கிறது. "மக மாயி விளையாடுவதற்கு முன்பு ஜுரம் வரும் என்பார்களே ! அம்மாதிரித்தான் வந்துவிட்டதோ !" என்று நினைக்கும்போது மகமாயியின் ரூபம் ஏதோ ஒரு பயங்கரத்துடன் தெரிவதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாகிய சமயம் தன்னை யறியாமல் கூவென்று கத்திவிட்டாள்.

தோட்டக்காரன் இந்த கூக்குரலைக் கேட்டு ஓடிவந்து "என்னம்மா! என்ன நடந்தது ? ஏன் இப்படிக் கத்துகிறீர்கள் ? என் வீட்டில் குடியிருக்கும் கிழவிக்குக் கூட ஜுரம் காய்ந்தது. மாரியாத்தாள் வார்த்துவிட்டது. உங்கள் ஜுரத்தைப் பார்த்தால்கூட பயமாகத்தானிருக்கிறது... அம்மா !... வீதியில் மகமாயி ப்ரார்த் தனைக்காரர் வருகிறார்கள். வழக்கம்போல் அரிசி போடுகிறீர்களா !" என்றான்.

அதே சமயம் மகமாயி ப்ரார்த்தனைக்காரர்..... வீதிக்கொருவராக விளையாட வந்திருக்கிறேன். தேசத்தில் ஆயிரம் பேரை அலங்கரிக்க வந்திருக் கேன்... என்ற குரல் கேட்டதும் பார்வதியம்மாளின் உடலே பயத்தால் நடுங் கியது. தோட்டக்காரன் கூறிய விஷயம் இன்னும் ஒருபடி விளக்கெண்ணெய் கொடுத்ததுபோல் வயிற்றைக் கலக்கிவிட்டது. வெயர்வை குபீரென்று பொங்கி வழிந்து ஓடுகிறது. தள்ளாடத் தடமாட எழுந்து உள்ளே போய் தினம் ஒரு படி அரிசி கொடுக்கும் வழக்கத்திற்கு விரோதமாக ஒரு மரக்கால் நிறைய அரிசியை

எடுத்துக்கொண்டு ஒத்தை ரூபாயுடன் வீதிக்கு வந்தாள். "அம்மா ! மகமாயித்தாயே ! என்னிடம் வராதேடீயம்மா ! என்னை விட்டுவிட்டு உன் முத்துக்களை வேறிடம் அலங்காரம் செய்து மகிழடி தாயே !" என்று மனத்திற்குள் எண்ணி வேண்டியபடியே அரிசியைக் கூடையில் கொட்டப்போகும் சமயம் மாரியாத்தாள் "ஓ!" வென்று ஒரு பெருங்குரலில் கூச்சலிட்டு..."அடீ.....சண்டாளீ.....த்ரோகி.....உன்னரிசியும் ரூபாயும் எனக்கு வேண்டாமடீ ! நான் விளையாடி மகிழ்ந்த பெண்ணை வேணுமென்று அழகு குறைந்துவிட்டதென்று தள்ளிவிட்டப் பாவியல்லவா... இரு... இரு...உன்னை என்னவிதம் செய்துவிடுகிறேன் பாரடீ...ஹா... என்னை என்னவென்று நினைத்தாய் ! என் பெயரைக் கேட்கும்போதே மக்கள் பயந்து பக்தி ச்ரத்தையுடன் வணங்கும் மகிமைக்கார மகமாயி என்பதை மறந்தாயா...நிரபராதியான ஒரு குணவதியை நான் விளையாடிய தற்குத் தள்ளிவைத்து வயிற்றெரிச்சல் செய்ததுமன்னியில் அவளுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாக நடிக்கச்செய்து நடுத்தெருவில் விட்டதுமல்லாமல் அந்தப் புனிதவதியை மகா பதிவ்ருதையை, பரிசுத்தாத்மாவை அபாண்டமாகச் சொல்லிய சண்டாளியான உன் அரிசி எனக்கு இந்த மண்ணுக்கு சமானமடீ... இதோ இந்த மண்ணைக்கூட என்னிடம் பக்தியுடனும் ச்ரத்தையுடனும் கொடுத்தால் நான் அ[illegible]க வா[illegible]க்கொண்டு ஆனந்தக் கூத்தாடுவேண்டீ!...

பத்தினியைப் பதறச்செய்த உன் வாயில் புழுகைக் கொண்டு அடைத்து வேடிக்கை பார்க்கச் செய்வேண்டீ. பெத்த குழந்தையைத் தாயாரிடம் கொடுக்காத கடின நெஞ்சில் நான் வந்து உட்கார்ந்து முத்துக்களால் அழுத்து வேண்டீ...பிசாசு ஜென்மமெடுத்திருக்கவேண்டிய நீ பெண் ஜென்மம் எடுத்து விட்டது உன் பூர்வஜென்மாவில் நீ ஒரு கர்ப்பிணிக்கு உதவி செய்த பலனாகும். மகா பாவியாகிய உன் ரூபாய் எனக்கு வேண்டாம்...என் தட்டில் உன் ரூபாய் விழுந்தால் உலகமே எரிந்துவிடும். சண்டாளப் பணம் என் கையில் அமர யோக்யதை இல்லை. நான் விளையாடி உயிர்ப்பிச்சை கொடுத்துத் தள்ளிய பேதையைப் பயித்தியம் என்று கூறித் தள்ளி இரண்டாவது விவாகம் செய்து மகனின் மதியைக் கலக்கி வாழ்வைப் பாழுபடுத்திய பாதகத்தை நீ மறைத்தால் நான் மறைப்பேனு ? உலகம் அறியட்டும். ஊர் சிரிக்கட்டும்.

பெண்களுக்குக் கணவனே தெய்வம் என்கிற தத்துவத்தை மறந்து உன் கணவனை தேசாந்திரம் அனுப்பிய பாதகம் உன்னை விடுமா ? அவன் வயிறெரிந்து இடும் சாபத்தை நீ விலக்கமுடியுமா ? உத்தம நண்பனையும் பதிவ்ருதா ரத்தினத்தையும் நீ பழித்த படாப்பழி உன்னை விடுமா! என் அண்ணன் ஸ்ரீ ராமனின் பாணம்போல் கிறு கிறு கிறு என்று சுற்றிச்சுற்றி வந்து உன்னைச் சிதைத்துவிடமாட்டேனு ? அடீ வஞ்சகக்கள்ளீ ! என்ன விழிக்கிறுய் ! நம் வண்டவாளம் வெளியானதென்று திருகத் திருகப் பார்க்கிறுயா...ஆஹ்ஹா...அனியாயமான அக்ரமத்தை அஞ்சாது கூறிய நீ அந்த உத்தமியின் காலில் ஒட்டிய தூசிக்கு ஈடாவாயா...அவள் மிதித்த மண்ணை மிதிக்க உனக்கு யோக்யதை உண்டா? அந்த பரிசுத்தாத்மா என்னைச் சரணம் புகுந்து என் சந்நிதியில் தவங்கிடந்து என் ஆசிபெற்று எனக்குக் கைங்கர்யம் செய்வதற்காக தனது மதுரகீதத்தை—விலையிலாமாணிக்கத்தை— இரவு பகலாக உழைத்துப் பொருள் தேடி என்றும் அழியா வரம் பெற்றுக் கல்லின் மேல் எழுத்தாகத் திருப்பணி செய்து என்னிடமும் என் அண்ணனை ஸ்ரீமந் நாராயணனிடமும் பரம ப்ரீதியுடன் திருவருள் பெற்றுவிட்டாள், உனக்கு இனி ஏழு தலைமுறையானுலும் இந்தப் பேறு கிடைக்குமா ? இந்தப் புகழ் கிடைக்குமா ?

உன் பாபத்தின் பயங்கரச் சுழல்தான் உன்னைத் தள்ளிப் புரட்டிப் புரட்டி அடித்துச் சித்திரவதை செய்யப்போவதை மறக்காதே. அடீ கள்ளீ ! நீ செய்த சதியை, இந்த வேப்பிலையைக் கையில் பிடித்துக்கொண்டு ஒப்புக்கொள்ளு. உம். என்ன யோசிக்கிறுய்?...இல்லை என்று சொல்லிவிடு. பிறகு ஆவதைப்பாரு...

சென்ற இதழ் வெளியான பிறகு அன்புடன் நமது மலருக்கு விஷயதானம் செய்துள்ளவர்களின் விவரங்களைக் கீழே காணவும்.

69. ஸ்ரீ. உ. வே. கோ. க. வா. அ. குமார ஸ்ரீசைலாசார்ய ஸ்வாமி
70. ,, உ. வே. நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி
71. ,, வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்
72. ,, டாக்டர் எம். தேவாஜி ராவ்
73. ,, வி. கிருஷ்ணசாமி சர்மா
74. ஸ்ரீமதி வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்
75. ,, ஆர். ராஜாமணி, எம். ஏ., எல். டி.
76. ,, பாலா. கி. ஜயலக்ஷ்மி, நாச்சியார்கோவில்.
77. சித்திரக்காரர் "குஞ்ஜரன்"

மோகினியின் பாக்யத்தால் க்ருபைகூர்ந்து ஒப்புயர்வற்ற அரிய பொக்கிஷம் போன்ற வியாசங்களை பரிபூர்ண ஆசியுடன் அருளிய மகான்களாகிய ஸ்வாமிகளை தெண்டன் சமர்ப்பித்து எனது நன்றியறிதலை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றையோருக்கும் எனது வந்தனம் உரித்தாகுக.

சிங்கப்பெருமாள் கோவில் }
1—11—43 }

உங்களிடம் நன்றியுள்ள,
வை. மு. கோதைநாயகி.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம் 8-ம பக்கத்தொடர்ச்சி

பள்ளிக்கூடத்துக்கு நாழியானதால் பசங்கள் சாப்பிடுவதைப் பார்த்ததும் இன்னும் ஆத்திரம் பீறிக்கொண்டு வந்ததேயன்றிக் குறையவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தாள். அதற்குள் அவள் புருஷன் கூப்பிடுவதாக ஆள் திரும்பவும் வரவே முகத்தைத் தூக்கிக்கொண்டு விர்ரென்று போனாள். அவன் "என்ன சாரதா மூன்சி ஏன் இத்தனை கோபமாய் இருக்கிறது? என்ன சமாச்சாரம்?"

சாரா:—என்ன சமாச்சாரம்! நல்ல சமாச்சாரம்தான். காலை முதல் பூஜை செய்கிறேன். இன்னும் முடிந்தபாடில்லை. ஸ்தோத்திரம் செய்வதற்குள் நூறு தடங்கல்கள். எப்படியோ முடித்து அமுது பண்ணுவதற்குள் அந்தச் சனியன் குழந்தை பழத்தையெல்லாம் தின்றுவிட்டது. தளிகையாவது அமுது செய்யலாம் என்று உள்ளேபோனால் அதற்குள் பசங்களெல்லாம் தின்றுகொண்டிருந்தன. இந்த வீட்டில் ஸ்வாமிக்கு என்று வைத்தால்கூட முடியறதில்லை—என்று முணுமுணுத்தாள்.

கணவன்:—அப்பா! இதற்குத்தானா முகத்தை இப்படி வைத்துக்கொண்டிருக்கிறாய்? என்னவோ என்று நினைத்தேன். சாரதா! ஸ்வாமி சந்நிதியில் உட்கார்ந்து பூஜைசெய்து ஏதாவது அமுது பண்ணினால்தான் பூஜைசெய்த பலன் என்று நினைத்தாயா என்ன? அதுதான் பைத்தியக்காரத்தனம், மானசீகமாய் துதித்தால்கூட அப்பன் ஏற்றுக்கொள்கிறான். துளசி கிள்ளிப்போட்டு சுத்தநீர்த்தம் அமுது செய்வித்தால்கூட ஏற்றுக்கொள்கிறான். அப்படிச்செய்தால் திருப்தி இல்லை; பூஜைதான் செய்யவேண்டுமென்றால் பின்மாலை எழுந்து பூஜைசெய்; இல்லையேல், நாங்கள் எல்லாரும்போன அப்புறம் செய். இப்படி மூன்சியை தூக்கிக்கொண்டு ஆத்திரத்தோடு பூஜைசெய்தால் பகவானுக்குத்தான் ஏற்குமா!" என்று நல்ல புத்திகளைக் கூறினான்.

சாரதாவுக்கு பர்த்தா சொன்னதும் ஏதோ ஒரு உணர்ச்சி தோன்றியது. சட்டென்று விழுந்து பர்த்தாவை வணங்கிவிட்டு, இருபாதங்களையும் பிடித்துக்கொண்டு "பெண்களுக்கு பர்த்தாதான் தெய்வம் என்பார்கள். அதையெல்லாம் விட்டு எல்லாரையும் கடிந்துகொண்டே பூஜைசெய்வது பலன் இல்லை" என்று நீங்கள் சொன்னதும்தான் தெரிகிறது" என்று சொல்லி பூரித்தமுகத்துடன் எழுந்தாள். அவள் சந்தோஷத்தைப் பார்த்து அவன் உள்ளம் மலர்ந்தது.

"JAGANMOHINI" (Nov'43) Regd. No. M. 2210.



'மதனகாமராஜன்,' 'அனந்த சயனம்,' 'குமாஸ்தாவின் பெண்,' 'பிரஹலாதா' படங்களில் புகழ்பெற நடித்த தென்னாட்டுத் தலைசிறந்த நடிகை எம். வி. ராஜம்மா சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் அருந்துவது நரஸூஸ் காபிதான். நரஸூஸ் காபியின் தனிப்பட்ட நறுமணத்திற்காகத்தான் நான் அதை விரும்புகிறேன்."

M. V. Rajamma.

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

நரஸூஸ் காபி

M N K—17 TM

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, B. O.